வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 22.06.2023 வியாழக்கிழமை | இதழ் : 195 | பக்கங்கள் : 16

### இலங்கை அரசாங்கம்

# பொறுப்புக்கூறலை செய்யாதுவிடின் சர்வதேச சமூகம் செய்வதற்கு நேரும்!

## ஐ. நா. மனித உரிமைகள் பேரவை காட்டம்

ஜெனிவா, ஜூன் 22

**கடந்த கால மீறல்கள் தொடர்பில் இலங்கை பொறுப்புக்கூறல் செயல்பாடுகளை முன்னெடுக்கவில்லை. இது தொடர்ந்தும் முன்னெடுக்கப்படாதுவிடின் சர்வதேச சமூகம் அதனை பூர்த்தி செய்வதற்கான பங்கை வகிக்க முடியும் - இவ்வாறு ஐ. நா. மனித உரிமைகள் பிரதி ஆணையாளர் நாடா அல்-நஷிப் எச்சரித்துள்ளார்.**

அத்துடன் நம்பகமான குற்றச்சாட்டுக்களுக்கு பொறுப்புகூற வேண்டியவர்களுக்கு எதிராக தடைகள் விதிக்கப்படும் என்றும் இலங்கை தொடர்பில் அவர் நேற்றுமுன்வைத்த வாய்மூல அறிக்கையில் சுட்டிக்காட்டினார்.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் நடக்கிறது. இதில், இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கை நேற்று வாசிக்கப்பட்டது. பிரதி ஆணையாளர் இதனை முன்வைத்தார்.

அதில், "ஆழ மான அரசமைப்பு மறுசீரமைப்புகளை மேற்கொண்டு,

15

## ஐ. நா. பொறிமுறையை நிராகரித்தது இலங்கை!

ஜெனிவா, ஜூன் 22

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களின் கீழ் இலங்கையின் இறுதிக் கட்ட யுத்த காலப் பகுதியில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பான வெளிப்புற ஆதாரங்களை

15

## 194 பாடசாலைகள் வடக்கில் மூடப்பட்டன!

### ஆளுநர் சார்ள்ஸ் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 22

வடக்கில் 194 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. மாணவர்கள் இல்லாமையால் மூடப்பட்டுள்ளன. இதற்கு காரணம் கிராமப் புறங்களில் இருந்து நகரங்களை நோக்கி மாணவர்கள் நகரத் தொடங்கியமையும் பிறப்பு வீதம் குறைந்து செல்வதுமே - என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா நேற்று கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

15

## மலையக தமிழரின் காணி உரிமை 7 'பேர்ச்' நிலமே ஆரம்பப் புள்ளி!

### மனோ கணேசன் எம். பி.

ஹற்றன், ஜூன் 22

மலையக தமிழர்களின் காணி உரிமை போராட்டத்தின் ஆரம்ப புள்ளி ஏழு பேர்ச் நிலம் ஆகும். அன்றைய மலைநாட்டு புதிய கிராமங்கள் அமைச்சர் திகாம்பரம் சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரமே இது தொடர்பான முதலாவது அரசாங்க ஆவணமாகும்.

இது தமிழ் முற்போக்கு கூட்டணியின்

15

## இலஞ்சம் - ஊழல் சட்டமூலம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது

கொழும்பு, ஜூன் 22

இலஞ்சம் - ஊழல் புதிய சட்டமூலத்தை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நேற்று சபையில் சமர்ப்பித்தார். இதைத் தொடர்ந்து சபையில் விவாதம் ஆரம்பமானது.

இலஞ்சம் - ஊழல் பழைய சட்டமூலத்தில் காணப்படும் குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டே

15

### நீதிமன்ற கட்டளையை மீறி

# குருந்தூர்மலை விகாரையை இராணுவத்தினரே கட்டினர்

## புதிய கல்வெட்டின் மூலம் நிரூபணம்!

முல்லைத்தீவு,ஜூன் 22

குருந்தூர்மலை விகாரை இராணுவத்தினரின் பங்களிப்பிலேயே அமைக்கப்பட்டது என்று அங்கு புதிதாக நிறுவப்பட்ட கல்வெட்டு மூலம் உறுதியாகியுள்ளதாகக் கூறப்படுகின்றது. குருந்தூர்மலை விகாரை கட்டப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து குருந்தூர்மலை ஆதி ஐயனார் ஆலய நிர்வாகம் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடுத்திருந்தது. இந்த வழக்கு விசாரணையில் 19.07.2022 அன்று விகாரை கட்டுமானம் எந்த மட்டத்தில் இருந்ததோ அதேநிலையில் பேணுமாறு நீதிமன்றம்

15



## வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கப்பட்ட பணத்தை மீளக் கொண்டுவரவேண்டும்!

### புதிய சட்டத்தில் இடமில்லை என்கிறார் பீரிஸ்

கொழும்பு, ஜூன் 22

மோசடிகள் மற்றும் ஊழல்கள் மூலம் வெளிநாட்டு வங்கிகளில் மறைத்து வைக்கப்பட்டுள்ள பணத்தை மீளவும் நாட்டுக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் புதிய சட்டமூலத்தில் இல்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பெருமளவான மோசடிகள் அல்லது ஊழல்கள் இடம்பெறும் பட்சத்தில் அந்தப் பணம் வெளிநாட்டு வங்கிகளில் முதலீடு செய்யப்படுவதாகவும் அந்தப் பணத்தை மீண்டும் நாட்டுக்கு பெற்றுக் கொடுப்பதே முதன்மையான தேவை

15

## இந்தியா நாடு கடத்தியவருக்கு விளக்கமறியல்!

கொழும்பு, ஜூன் 22

இந்தியாவில் கைது செய்யப்பட்டு இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர் என்று கூறப்படும் செல்வபாக்கியம் சுதாகரனை விளக்கமறியலில் வைக்க கொழும்பு

15

## உண்மையை அறியவே குருந்தூர்மலை வந்தேன்!

### உதய கம்மன்பில் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 22

வடக்கு - கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இங்கிருந்து கொழும்புக்கு வந்து மக்கள் பிரச்னையை கூறுகின்றார்கள். எனினும், அதன் உண் மைத்தன்மை எமக்குத் தெரியாது. அதனைத் தெரிந்து கொள்வதற்காகவே நான் இன்று (நேற்று) இங்கு (குருந்தூர் மலை) வந் தேன்."

- இவ்வாறு குருந்தூர் மலையில் தெரிவித்தார் பிவித்ரு ஹெல உறுமயவின்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# ரஞ்சன் ராமநாயக்கவுக்கு கண்டி நீதிமன்று பிடியாணை

கண்டி, ஜுன் 22

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணைக்கு முற்படத் தவறியதை அடுத்தே கண்டி மேலதிக நீதிவான் நீதிமன்றம் அவருக்கு பிடியாணை பிறப்பித்துள்ளது.

பெண் ஒருவரை திருமணம் செய்துக்கொள்வதாக உறுதியளித்து 10 இலட்சம் ரூபாயை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக 2010ஆம் ஆண்டு, கண்டி விசேட குற்ற விசாரணைப் பிரிவினரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது , அவர் நீதிமன்றில் முற்படவில்லை. இதையடுத்தே அவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. அத்துடன், இந்த வழக்கை எதிர்வரும் செப்ரெம்பர் 6ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக கட்டுகஸ்தோட்டையைச் சேர்ந்த ஆசிரியை ஒருவர் முறைப்பாடு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நாமல் ராஜபக்ஷ எம். பி. மீதான வெளிநாட்டு பயணத்தடை நீக்கம்

கொழும்பு, ஜுன் 22

கிரிஷ் நிறுவன வழக்கு தொடர்பில் அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிற்கு விதிக்கப்பட்ட பயணத் தடையை நீக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

கோட்டை நீதிவான் திலின கமகே, நாமல் எம். பியின் சட்டத்தரணியின் கோரிக்கையை ஏற்று இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இதனிடையே, கிரிஷ் நிறுவனத்துடன் தொடர்புடைய 7 கோடி ரூபாய் முறைகேடு தொடர்பாக அவரின் சட்ட ஆலோசனையை விரைவுபடுத்துமாறு நீதிமன்றம் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு நினைவூட்டல் அனுப்பியது. இந்த விடயம் தொடர்பில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படக் கூடிய சட்ட நடவடிக்கை தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையை சி. ஐ. டி. இன்னும் பெறவில்லை என நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டது.

இந்திய ரியல் எஸ்டேட் நிறுவனமான கிரிஷ் லங்கா பிறைவேற் லிமிற்றெட் இலங்கையில் ரக்பி விளையாட்டு வளர்ச்சிக்காக வழங்கிய 7 கோடி ரூபாயை முறைகேடாக பயன்படுத்தியதாக தொடரப்பட்ட வழக்கு தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தார்.

நிதி குற்றப் புலனாய்வு பிரிவின் ஆரம்பகட்ட விசாரணைகளை தொடர்ந்து, கிரிஷ் நிறுவனம் பணத்தை நிஹால் ஹேமசிறி பெரேராவுக்குச் சொந்தமான எச். எஸ். பி. சி. வங்கிக் கணக்குக்கு அனுப்பியதாகவும், பின்னர் அந்த பணத்தை அவர் நாமல் ராஜபக்ஷவிடம் இரண்டு முறை கொடுத்ததாகவும் தெரியவந்தது.

கிரிஷ் நிறுவனம் வழங்கிய பணத்தை சந்தேகநபரால் நிறுவனத்தின் உண்மையான நோக்கத்துக்குப் பயன்படுத்தாமல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக ஜே. வி. பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க முறைப்பாடு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பகிடிவதைகள் குறித்து 1997இற்கு முறையிடலாம்

கொழும்பு, ஜுன் 22

உயர்கல்வி நிறுவனங்களில் இடம்பெறும் பகிடிவதைகள், போதைப்பொருள் பாவனை குற்றங்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து பொதுமக்கள் “1997” என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்க முடியுமென பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் மாத்திரமே குறித்த தொலைபேசி இலக்கத்தின் ஊடாக அறிவிக்குமாறு பொலிஸ் தலைமையகம் கேட்டுள்ளது. (ஐ)

# நள்ளிரவு பயணித்தவரிடம் நகை, பணம் வழிப்பறி!

யாழ்ப்பாணம், ஜுன் 22

நள்ளிரவுவேளை பயணித்த ஒருவரிடம் நகை, பணம், கைக்கடிகாரம் என்பன வழிப்பறி செய்யப்பட்டுள்ளது.

கொக்குவில் - தாவடி பகுதியில் நேற்றுமுன்தினம் 11.30 மணியளவில் இந்த வழிப்பறி நடந்துள்ளது.

மானிப்பாயை சேர்ந்த நபரிடமே 24 ஆயிரம் ரூபாய் பெறுமதியான சிற்றிசன் கைக்கடிகாரம், ஒரு பவுண் மோதிரம், 2 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாய் பணம் என்பவை வழிப்பறி செய்யப்பட்டன என்று பாதிக்கப்பட்டவர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வீதியில் சென்றுகொண்டிருந்த தன்னை ஒருவர் முதலில் மறித்து நிறுத்தினார் என்றும் பின்னர் வந்த மூவரில் ஒருவர் கத்தியை கழுத்தில் வைத்து மிரட்ட, மற்றொருவர் கன்னத்தில் அறைந்தார் என்றும் பாதிக்கப்பட்டவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்தார். (ஐ)

# விவசாய பொருளாதாரத்தை உருவாக்கத் திட்டம் வகுப்பு!

## அமைச்சர் மகிந்த அமரவீர

கொழும்பு, ஜுன் 22

ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைய விவசாயத்துறையில் தொழில்நுட்பத்தை இணைத்து ஏற்றுமதி விவசாய பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அதன் ஊடாக விவசாய அமைச்சு வெளிநாட்டு வருவாயை ஈட்டும் அமைச்சாக மாறும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

‘ஸ்திரமான நாட்டுக்கு அனைவரும் ஒரே வழிக்கு’ என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விவசாய தொழில்துறைக்கு அவசியமான அனைத்து வசதிகளையும் பெற்றுக்கொடுத்தமையால் இம்முறை பெரும் போகத்தில் சிறந்த அறுவடையைப் பெற்றுக்கொள்ள முடிந்தது என்று தெரிவித்த அமைச்சர், ஹெக்டெயார் ஒன்றில் அதிகளவான அறுவடையை பெற்றுக்கொள்வதற்கு அவசியமான தொழில்நுட்ப முறைமைகளை கண்டறியும் பணிகள் இடம்பெற்று வருகிறது.

கடந்த காலங்களில் விவசாய நிலங்களில் இருந்து போராட்ட களத்திற்கு சென்ற விவசாயி தற்போது மீண்டும் விவசாய நிலத்துக்கு வந்து தேசிய உற்பத்திக்கு பங்களிப்பு செய்து வருகிறது.

நாட்டின் நுகர்வுத் தேவைக்காக அனைத்து விவசாயப் பொருட்களையும் வெற்றிகரமாக உற்பத்தி செய்வதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், அவை விரைவில் விளைநிலங்களில் நடைமுறைப்படுத்தப்படும். ஜனாதிபதி நாட்டை பொறுப் பேற்றுக் கொண்டபோது உர வரிசை, எரிபொருள் வரிசை, எரிவாயு வரிசை போன்ற வரிசைகள் மாத்திரமே காணப்பட்டன.

நான் விவசாய அமைச்சராக பதிவியேற்றுக்கொண்ட போதும் பெரும் சவால் காணப்பட்டது. உள்நாட்டு விவசாயிகளுக்கு உரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த சவாலை ஏற்றுக்கொண்டு முதற்கடமையாக விவசாயிகளுக்கு உரத்தை பெற்றுக்கொடுத்தேன். ஜனாதிபதியின் அறிவுரைக்கு அமைய விவசாயிகளுக்கான அனைத்து சலுகைகளையும் பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.



அதனால் தற்போது பெரும் போக விளைச்சல் போதியளவு கிடைத்துள்ளது. சிறுபோகத்துக்கு அவசியமான உரமும் தற்போது மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி நாட்டை பொறுப்பேற்றுக்கொண்ட போது விவசாயிகள் விவசாய நிலத்தை விடுத்து ஆர்ப்பாட்ட பூமியில் களமிறங்கியிருந்தனர். தற்போது விவசாயிகள் தேசிய உற்பத்திக்கு பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

சில அரசியல் தலைவர்களே விவசாயிகளை ஆர்ப்பாட்ட களத்திற்கு இழுத்தார்கள் என்பது ரகசியமல்ல. விவசாயிகளை விவசாய செயற்பாடுகளிலிருந்து விடுபடச் செய்து மக்களையும் பசியில் வாடச் செய்யும் அரசியல் சூழ்ச்சி செயல்பாடுகளையும் சிலர் முன்னெடுத்தனர். அந்த சவால்களுக்கு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் சாதகமான முறையில் முகம் கொடுத்தது - என்றார். (ஐ)

# ஆட்சியில் உள்ளவர்களுக்காகவே சட்டங்கள் இயற்றப்படுகின்றன

## அருந்தவபாலன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுன் 22

இலங்கையில் உருவாக்கப்படுகின்ற பெரும்பாலான சட்டங்கள் நாட்டுக்காகவோ அல்லது மக்களுக்காகவோ உருவாக்கப்படுவதில்லை. மாறாக ஆட்சியில் உள்ளவர்களுக்காகவே உருவாக்கப்படுவதாக தமிழ் மக்கள் கூட்டணியின் பேச்சாளர் கந்தையா அருந்தவபாலன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு குற்றம் சுமத்தியிருந்தார்.

ஊடகங்களை ஒழுங்குபடுத்தும் சட்டத்தை மிக அவதானமாக கையாள வேண்டும். ஏனெனில், இலங்கை போன்ற நாடுகளில் நிர்வாகம் மற்றும் நிதித்துறை அரசியல் மயப்படுத்தப்பட்டிருப்பதால் மக்களின் ஜனநாயக உரிமையை பாதுகாப்பதிலும் ஆள்பவர்களுடைய அதிகார துஷ்பிரயோகங்களை வெளிகொண்டு வருவதிலும் ஊடகங்கள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன.

அந்தவகையில் ஊடகங்களை ஒழுங்குபடுத்துகின்ற சட்டங்கள், ஆட்சியாளர்கள் தமக்குத் தேவையான வகையில் செயல்படுவதற்கான அனுமதியை வழங்குவதாக இருக்கக் கூடாது என்பதில் சகலரும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

இலங்கையில் உருவாக்கப்படுகின்ற பெரும்பாலான சட்டங்கள் நாட்டுக்காவையாகவோ அல்லது மக்களுக்கானவையாகவோ இருப்பதைவிட ஆட்சியில் உள்ளவர்



களுக்காகவே பெரும்பாலும் உருவாக்குவதை கடந்த கால வரலாறுகள் எடுத்துக் காட்டுகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனக்கு ஏற்ற வகையில் எதிர்காலத்தில் உருவாகக்கூடிய மக்களின் எதிர்ப்புகளை அடக்குகின்ற நடவடிக்கைக்கு ஊடகங்களை ஒழுங்குபடுத்தும் சட்டங்களை கொண்டு சென்று விடுவாரோ என்ற ஐயம் எம் மத்தியில் உள்ளது.

அதாவது ஆட்சியாளர்கள் தமக்கு எதிராக இருக்கக்கூடிய மற்றும் மக்களுக்கு ஆதரவாக இருக்கக்கூடிய ஊடகங்களை இல்லாமல் ஒழிக்கும் அல்லது அடக்குகின்ற சட்டமாகவே இது பார்க்கப்படுகிறது - என்றார். (ஐ)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 29

நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் வாராந்த சுக்கிரவார சிறப்பு சொற்பொழிவு ஆலயத்தின் சண்முக விலாச மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கத்தின் தலைமை உரையைத் தொடர்ந்து, சிறப்பு சொற்பொழிவை இளம் சைவப்புலவர் ஏ. அனுசாந்தன் ‘கதிரகாம வெற்பில் உறைவோன்’ என்னும் தலைப்பில் ஆற்றுவார்.

சொற்பொழிவின் இறுதியில் மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ)

ஈழநாடு
Eelanadu
22.06.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், ஆனி 07

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# ஜீ. எல். பீரிஸின் சுடலை ஞானம்

ஊழல்களின் மூலம் வெளிநாடுகளில் பதுக்கப்பட்ட பணத்தை மீளவும் நாட்டுக்குள் கொண்டுவரவேண்டுமென்று முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் மொட்டு கட்சியின் முன்னாள் தவிசாளருமான பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்திருக்கின்றார். ஜீ. எல். பீரிஸ் கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர். சட்டத் துறையில் நிபுணத்துவம் பெற்ற இலங்கையர்களில் ஒருவராகக் கருதப்படுபவர் - ஆனால், அவ்வாறான நிபுணத்துவத்துக்கும் அவரின் கல்விக்கும் சிறிதும் பொருத்தம் இல்லாத செயல்களையே பீரிஸ் கடந்த காலத்தில் மேற்கொண்டிருந்தார். மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் அமைச்சராக இருந்து ராஜபக்ஷ குடும்பத்தின் அனைத்து செயல்பாடுகளையும் நியாயப்படுத்திய ஒருவர்தான் பீரிஸ்.

மகிந்த ராஜபக்ஷ காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடனான பேச்சுக்கு அரச தரப்பில் தலைமை தாங்கிய பீரிஸ் தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் ராஜபக்ஷக்களின் நிலைப்பாட்டை நியாயப்படுத்துவதற்காக மட்டுமே தனது அறிவைப் பயன்படுத்தியிருந்தார். அரசியலில் ஒரு புலமைமிக்க மனிதராக பீரிஸ் ஒருபோதுமே நடந்துகொண்டதில்லை.

ராஜபக்ஷக்களின் அரசியல் அணுகுமுறைகளை கொள்கை நிலைப்பாடு சார்ந்து ஆதரிக்கும் ஒருவராகவே பீரிஸ் இறுதிவரையில் இருந்தார். ஆனால் பொதுவாகவே உள்முரண்பாடுகளுக்குள் தென்னிலங்கை அரசியல்வாதிகள் சிக்குகின்றபோது மட்டுமே திடீரென்று தங்களை நீதிமான்களாகக் காண்பித்துக் கொள்வார்கள். இதற்கு பிந்தைய உதாரணம்தான் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ். இவ்வாறான புத்திஜீவிகள் தங்களின் மனச்சாட்சிக்கு அமைவாக ஒருபோதும் செயல்படுவதில்லை. ராஜபக்ஷக்கள் மூலம் அதிகாரத்தையும் அதன் மூலமான சுகபோகங்களையும் அனுபவித்தவர்கள், ராஜபக்ஷக்களின் வீழ்ச்சியைத் தொடர்ந்து தங்களை சுத்தம் செய்வதற்காக அதிகம் முயற்சி செய்கின்றனர்.

ஊழல் மூலம் சம்பாதித்த பணத்தை வெளிநாடுகளில் பதுக்கி வைக்கும் குற்றச்சாட்டு அதிகம் ராஜபக்ஷ குடும்பத்தை நோக்கியதாகவே இருக்கின்றது. அவர்களோடு அரசியல் உல்லாசத்தில் இருந்தபோது வெளிவராத கரிசனை பீரிஸ் போன்றவர்களுக்கு இப்போது எழுகின்றது. ஒரு காலத்தில் தவறான பக்கத்தில் இருந்தவர்கள் - பின்னர் திருந்துவது தவறானதா - இவ்வாறானதொரு கேள்வி எழலாம் - அது தவறல்ல. தங்கள் தவறுகளை சரிசெய்து கொள்ள ஒருவர் அல்லது ஒரு கட்சி முயற்சிக்குமாயின் - நாம் அதனை வரவேற்கத்தான் வேண்டும். ஆனால், அவ்வாறனவர்கள்– தாங்கள் தவறு செய்திருக்கின்றோம் என்பதை முதலில் பகிரங்கமாக மக்கள் முன்னால் வெளிப்படுத்த வேண்டும். தங்களின் தவறுகளுக்கு மக்களிடம் மன்னிப்பை கேட்டுவிட்டு அதற்கான பிராயச்சித்தங்களில் ஈடுபடலாம்.

ஆனால், இலங்கையின் அரசியலில் பொறுப்புக்கூறும் நாகரிகம் சிறிதளவுகூட வளர்ச்சியடையவில்லை. இது தமிழ் அரசியல் சூழலுக்கும் பொருந்தாது என்று வாதிட முடியாது. அரசியலில் ஒரு விடயத்தில் தவறு இழைத்தால் அல்லது வாக்குறுதியை நிறைவேற்ற முடியாது போனால் அல்லது அணுகுமுறைகள் தோல்வியடைந்தால் அதற்கான பொறுப்பை குறித்த அரசியல் தலைமைகள் ஏற்றுக்கொள்ள வேண்டும். மேற்குலக நாடுகளில் இந்த பண்பை தெளிவாகக் காணலாம். சிங்கள அரசியல்வாதிகளை விடுவோம் - தமிழ் அரசியல் தலைவர்களாவது வாக்களித்த மக்களுக்கு பொறுப்பு சொல்லும் நல்ல அரசியல் பண்பை வளர்த்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். தோல்வியடைந்தால் அடுத்தவருக்கு வழிவிட்டு ஒதுங்கும் பண்பை பழக வேண்டும்.

# திருத்தப் பணிகள் நிறைவடைந்து கடலில் இறங்கியது குமுதினி படகு

## நெடுந்தீவுக்கான சேவையில் விரைவில் இணையும்

*வடமராட்சி, ஜூன் 22*

*குமுதினி படகின் திருத்தப் பணிகள் நிறைவடைந்து மீண்டும்கடலில்இறக்கப்பட்டுள்ளது.*

*குறிகாட்டுவான் - நெடுந்தீவு பயணிகள் சேவையில் ஈடுபடும் குமுதினி படகு அடிக்கடி பழுதுபட்டது. இதையடுத்து, அந்தப் படகு திருத்தப் பணிகளுக்காக வல்வெட்டித் துறை ரேவடி கடற்கரைக்கு கொண்டு செல்லப்பட்டது. சுமார், 70 இலட்சம் ரூபாய் செலவில் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் இந்தப் படகு திருத்தியமைக்கப்பட்டது.*




*மீண்டும் குறிகாட்டுவான் - நெடுந்தீவு பயணிகள் சேவையில் ஈடுபடுவதற்காக நேற்று முன்தினம் இந்தப் படகு கடலில் இறக்கப்பட்டது. படகை கடலில் இறக்குவதற்கு முன்னர் சம்பிரதாய பூர்வமாக பொங்கல் பொங்கி வழிபாடும் நடைபெற்றது. இரு நாள் பரிசோதனையின் பின்னர் குமுதினி படகு நெடுந்தீவு நோக்கி பயணமாகும் என்று தெரிவிக்கப்பட்டது.*

*குமுதினி படகு, கடந்த 1968 முதல் நெடுந்தீவுக்கான போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-02)*

# ஏ. எல். மாணவர்களுக்கான ஆங்கில பாட கருத்தரங்கு!

*யாழ்ப்பாணம், ஜூன் 22*

*க. பொ. த. உயர்தர மாணவர்கள் தெரிவு செய்யக்கூடிய பிரதான பாடங்களில் ஒன்றான ஆங்கில இலக்கியம் (பாட இலக்கம் 73) தொடர்பான அறிவூட் டல் கருத்தரங்கு நடை பெறவுள்ளது.*

*யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் மொழியியல் ஆங்கிலத் துறையினரின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தின் புதிய பரீட்சை மண்டபத்தில் இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.*

*இதில், 2023, 2024, 2025 ஆகிய வருடங்களில் நடக்கவுள்ள உயர் தர பரீட்சையில் ஆங்கில இலக்கிய பாடத்துக்கு தோற்றவுள்ள மாணவர்கள், தற்போது தரம் 10, தரம் 11இல் கல்வி பயிலும் மாண வர்கள், எதிர் காலத்திலே உயர்தரத்தில் ஆங்கில இலக்கிய பாடத்தை தெரிவு செய்ய விரும்பும் மாணவர்கள், ஆங்கில இலக்கியத்தை கற்பிக்கும் ஆசிரியர்கள், ஆங்கில இலக்கியத்தை கற்கும் மாணவர்களின் பெற்றோர் கலந்து கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*(ஐ)*

# சிறப்பு சொற்பொழிவும் நாயன்மார் குருபூசையும்

*யாழ்ப்பாணம், ஜூன் 22*

*சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், சிவசிறீ பால. திருகுணானந்தக் குருக்கள் நடத்தும் வாராந்த பெரியபுராண சிறப்புச் சொற்பொழிவும் நாயன்மார் குருபூசை தொடர் 03 - திருஞான சம்பந்தர் குருபூசை விழாவும் சிறுப்பிட்டி நாகதம்பிரான் ஆலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.*

*எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் கலந்து கொள்வார்.*


*சேக்கிழார் பெருமான் , திருநாவுக்கரசர் குருபூசையை தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்வுகள் நடைபெறும். தொடர்ந்து ‘ஞானக்குழந்தை’ என்னும் விடயப்பொருளில் இளம் சைவப்புலவர் க. கயிலைநாதன் சொற்பொழிவாற்றுவார்.*

*இதன்போது, மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும்.*

*ஆன்மீக விருந்தினர் உரையைத் தொடர்ந்து குருபூசையை முன்னிட்டு மாணவர்களிடம் நடத்தப்பட்ட வினாடி வினா போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.*

*(ஐ)*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். புது வேலை அமையும். வியாபாரம் தழைக்கும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நன்மை கிட்டும் நாள்.

**இடபம்**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். தைரியம் கூடும் நாள்.

**மிதுனம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். தோற்றப் பொலிவு கூடும். புது நட்பு மலரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். மரியாதை கூடும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அனாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களால் சச்சரவு வரும். ரகசியங்களை வெளியிட வேண்டாம். வளைந்து கொடுக்க வேண்டிய நாள்.

**சிம்மம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கன்னி**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். லாபம் பெறும் நாள்.

**துலாம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. பொறுமைத் தேவைப்படும்.

**மகரம்**
கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். ஆதாயமும் உண்டு. திறமைகள் வெளிப்படும் நாள்.

**கும்பம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**மீனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நீண்டநாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். சக ஊழியர்கள் உதவுவார்கள்.

# மீண்டும் பா. ஜ. கவை ஆள அனுமதிப்பது தமிழகம், இந்தியாவுக்கு கேடாக முடியும்!

*திருவாரூர், ஜுன் 22*

"மீண்டும் பா. ஜ. கவை ஆள அனுமதிப்பது என்பது தமிழுக்கும் - தமிழினத்துக்கும் - தமிழகத்துக்கும் - இந்திய நாட்டுக்கும் - இந்தியாவின் எதிர்காலத்துக்கும் கேடாக முடியும்" என்று கலைஞர் கோட்டம் திறப்பு விழாவில் தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் பேசினார்.

ஒகஸ்ட் 15, விடுதலை நாள் அன்று மாநில முதல்வர்கள் எல்லாம் கொடி ஏற்ற வேண்டும் என்று இந்தியாவின் அனைத்து மாநில முதல்வர்களுக்கும் உரிமையைப் பெற்றுத் தந்தவர் கருணாநிதி. அதேபோல் இந்திய அரசியலில் 1971 முதல் அனைத்து அரசியல் பெரு மாற்றங்களுக்கும் முக்கிய காரணமாக இருந்தவர் அவர்தான். இந்திரா காந்தி அம்மையார் தொடங்கி அத்தனை இந்தியப் பிரதமர்களுடனும் நல்லுறவை வைத்திருந்தவர் கருணாநிதி. ஆட்சி மாற்றத்துக்கும் - பிரதமர்களை உருவாக்குவதிலும் அவரின் பங்கு பெரும் பங்காக இருந்துள்ளது.

பா. ஜ. க. கடந்த பத்தாண்டு காலமாகப் பரப்பி வரும் சர்வாதிகார காட்டுத் தீயை அணைக்க வேண்டிய கடமை நமக்கெல்லாம் இருக்கிறது. அதற்கான முதல் ஜனநாயக விளக்கை பாட்னாவில் ஏற்றுவதற்கான ஏற்பாட்டை நிதிஷ்குமார் தொடங்கி வைக்க இருக்கிறார். நானும் பாட்னா செல்கிறேன். ஜனநாயகப் போர்க் களத்தில் கருணாநிதியின் தளபதியாக நானும் பங்கெடுக்க இருக்கிறேன்.

இந்திய ஜனநாயகத்தைக் காக்க வேண்டிய நெருக்கடியான காலத்தில் இன்றைக்கு நாம் இருக்கிறோம். இதைச் செய்யாவிட்டால் மூவாயிரம், நான்காயிரம் ஆண்டுகள் பழமை கொண்ட தமிழ்நாடு என்ற மாநிலமே இல்லாமல் போய்விடும்.

மீண்டும் பா. ஜ. கவை ஆள அனுமதிப்பது என்பது தமிழுக்கும் - தமிழினத்துக்கும் - தமிழ் நாட்டுக்கும் - இந்திய நாட்டுக்கும் - இந்தியாவின் எதிர்காலத்துக்கும் கேடாக முடியும். மதச் சார்பற்ற ஜனநாயக சக்திகள் தமிழகத்தில் எப்படி ஒருமுகமாக இருந்து செயல்படுகிறோமோ, செயல்பட்டு வெற்றியைப் பெறுகிறோமோ, அத்தகைய செயல்பாடும் ஒருங்கிணைப்பும் அகில இந்திய அளவில் ஏற்பட்டாக வேண்டும். வெற்றி வேண்டும். வெற்றிக்கு முன்னால் ஒற்றுமை வேண்டும் - என்றார். (ஐ)

# செந்தில் பாலஜியை பதவி நீக்குமாறு அ. தி. மு. கவினர் நேற்று போராட்டம்!

*சென்னை, ஜுன் 22*

அமைச்சர் செந்தில் பாலாஜியை பதவி நீக்கம் செய்யக் கோரி தமிழ்நாடு முழுவதும் அ. தி. மு. க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஊழல், முறைகேடுகள், சட்டம்- ஒழுங்கு சீர்கேடு ஆகியவற்றை கண்டித்தும், வரித் துறையினரால் கைது செய்யப்பட்ட செந்தில் பாலாஜியை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வலியுறுத்தியே அ. தி. மு. க. நேற்று இந்தப் போராட்டத்தை தமிழகம் முழுவதும் நடத்தியது.

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தலைமையில்



நடைபெற்ற பிரதான போராட்டத்தில் ஏராளமான அ. தி. க. வினர் கலந்து கொண்டனர். இந்தப் போராட்டத்தின்போது மது ஒழிப்பும் வலியுறுத்தப்பட்டது. (ஐ)

# பிரதமர் மோடிக்கு எதிராக நாடு முழுவதும் எதிர்ப்பலை!

**ம. தி. மு. க. பொதுச் செயலர் வைகோ**

*சென்னை, ஜுன் 22*

பிரதமர் மோடிக்கு எதிராக நாடு முழுவதும் எதிர்ப்பலை உருவாகியுள்ளது என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகப் பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

ஆளுநர் ரவியை பதவிநீக்க வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டம் ம. தி. மு. கவால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு சேர்க்கவும் முதலமைச்சரின் கையொப்பத்தை பெறவும் வைகோ நேற்று சென்னை அறிவாலயம் சென்றார்.

சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய வைகோ, ம. தி. மு. க. பொதுக்குழு கூட்டப்பட்டு தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவியை நீக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றினோம். அதற்காக கையெழுத்து இயக்கத்தையும் தொடங்கியுள்ளோம். முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து கையெழுத்து பெற்றுள்ளோம்.

மீண்டும் மோடி வராத அளவுக்கு சூழல் உருவாகி வருகிறது. நாடு முழுவதும் எதிர்ப்பலை உருவாகியுள்ளது. தமிழ்நாடு, புதுச்சேரியில் ஓரிடத்தில் கூட பா. ஜ. க. அணி வெற்றி பெறாது. தமிழ்நாட்டில் பா. ஜ. கவை ஒழித்துவிடுவார்கள் மக்கள். எத்தனை முறை படையெடுத்தாலும், தமிழ்நாட்டுக்கு வந்தாலும் அரசியலில் பா. ஜ. க. வெற்றி பெற முடியாது. ஆளுநர் ஆர். என். ரவி தமிழ்நாட்டுக்கே கேடு - என்றார். (ஐ)

# அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு இதய அறுவைச் சிகிச்சை நிறைவு

*சென்னை, ஜுன் 22*

இதய அறுவை சிகிச்சைக்கு பின்னர் அமைச்சர் செந்தில் பாலாஜியின் உடல்நிலை சீராக உள்ளதாக காவேரி மருத்துவமனை அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், "அமைச்சர் செந்தில்பாலாஜிக்கு இதய அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் ஏ. ஆர். ரகுராம் தலைமையிலான மருத்துவர்கள் அறுவை சிகிச்சை மேற்கொண்டனர். அவருடைய இதயத்துக்குச் செல்லும் ரத்த நாளங்களில் இருந்த 4 அடைப்புகள் நீக்கப்பட்டுள்ளன. பைபாஸ் அறுவை சிகிச்சை முடிந்து செந்தில் பாலாஜியின் உடல்நிலை சீராக உள்ளது. அவரது உடல்நிலையை மருத்துவக் குழு ஒன்று தொடர்ந்து கண்காணித்து வருகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜுன் 13ஆம் திகதி செந்தில் பாலாஜி உள்ளிட்டோர் வீடுகளில் சோதனையில் ஈடுபட்ட வருவாய் துறை அன்றிரவே அவரை கைது செய்தது. இதைத்தொடர்ந்து, அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவர் பொலிஸ் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்கையில் கொண்டு வரப்படும் புதிய சட்டங்களால் பயன் இல்லை!

## சுமந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜுன் 22

**இலங்கையில் சட்டங்கள் தொடர்பாக பாரிய சிக்கல் நிலையே காணப்படுகின்றது. ஆனால் சட்டமூலங்களினால் இந்த பிரச்னைகள் ஏற்படவில்லை. மாறாக சட்டங்களை நடைமுறைப் படுத்துவதில் தான் பாரிய சிக்கல் நிலை காணப்படுகின்றது. இது இலங்கை தொடர்ந்தும் காணக்கூடியதொரு பிரச்னையாகும் என தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-தற்போதைய அரசாங்கம் புதிய சட்டங்களை கொண்டுவருகின்றது.

ஆனால் இந்த சட்ட மூலங்கள், சர்வதேச நாணய நிதியம் மற்றும் சர்வதேச அழுத்தங்களினால் கொண்டு வரப்படுகின்றது.

இது வெறுமனே கடுதாசி விரயத்தை ஏற்படுத்தும் நடைமுறை என நான் நினைக்கின்றேன்.

பொருளாதார நெருக்கடியான நேரத்தில் கூட வெறுமனே கடுதாசிகளை விரயமாக்கும் செயல்.

ஏனெனில் சட்டமூலங்கள் அமுல்படுத்தப்பட்டால் தான், அதன் நன்மைகளை மக்கள் பெறமுடியும்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தை திருப்திப்படுத்துவதற்காக கொண்டு வரப்படுகின்ற சட்டங்கள் இந்த நாட்டில் இடம்பெறுகின்ற ஊழல் மோசடிகளைத் தடுத்து நிறுத்தாது.

அத்துடன் இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூறல் என்ற விடயத்தில் அசமந்தப் போக்குடன் காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது-என்றார். (அ)

### எரிபொருள் சந்தைக்குள் பிரவேசிக்க

# மூன்று வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்ட 2 நிபந்தனைகள் நீக்கம்

கொழும்பு, ஜுன் 22

நாட்டின் எரிபொருள் சந்தைக்குள் பிரவேசிக்க மூன்று வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த இரண்டு நிபந்தனைகள், அந்த நிறுவனங்களுடனான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் அமைச்சரவைப் பத்திரமொன்றின் மூலம் மாற்றப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், ஐ.ஓ.சி என்பன போதுமான டொலர் கையிருப்பை பராமரிக்கத் தவறியதால், கடந்த காலத்தில் எண்ணெய் விநியோகத்தில் வரிசைகள் ஏற்பட்டதாகக் கூறி மின்சக்தி, எரிசக்தி அமைச்சு சினோபெக், ஆர்.எம். பார்க்ஸ் நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டது.

வெளிநாட்டு நிறுவனங்களுக்கு பல நிபந்தனைகளின் அடிப்படையில், எரிபொருள் பிரச்னையை நிவர்த்திப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படும் என அமைச்சு அறிவித்திருந்தது.

ஒரு நிறுவனம் இலங்கையில் எரிபொருளை விற்று, அதன் மூலம் ஈட்டும் வருமானத்தை, குறித்த எரிபொருள் தொகையை கொண்டு வந்த ஒரு வருடத்தின் பின்னரே நாட்டில் இருந்து வெளியே கொண்டு செல்ல முடியும் என்பது வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த நிபந்தனைகளில் ஒன்றாகும்.

அத்துடன், அந்த வருமானத்தை டொலராக மாற்றுவதற்கு 9 மாதங்களின் பின்னரே அனுமதி வழங்கப்படுமெனவும் அடிப்படை நிபந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாதாந்த அடிப்படையில் நாட்டுக்கு கொண்டுவரப்படும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் மொத்த மாதாந்த விற்பனை மதிப்பில் ஒரு சதவீதம் அமைச்சு அல்லது பரிந்துரைக்கப்பட்ட நிறுவனத்தால் சேமிக்கப்படும்.

எவ்வாறாயினும், மே 22 ஆம் திகதி சினோபெக் உடனான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு 4 நாட்களுக்கு முன்னர், மே 19 ஆம் திகதி இந்த இரண்டு நிபந்தனைகளும் அமைச்சரவை பத்திரமொன்றினால் நீக்கப்பட்டுள்ளன. (அ)

# கட்டுமானத்துறை மூலப்பொருட்களின் விலைகளை குறைப்பதற்கு இணக்கம்

கொழும்பு, ஜுன் 22

கட்டுமானத்துறையில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

மூலப்பொருட்களை இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் விலைகளைக் குறைப்பதற்கு இணங்கியுள்ளதாக வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஏ.எம்.பி.எம்.பி அத்தபத்து கூறியுள்ளார்.

கட்டுமானத்துறை மூலப்பொருள் இறக்குமதியாளர்களும் உற்பத்தியாளர்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அமைச்சுக்கு வரவழைக்கப்பட்டு இந்த விடயம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி அதிகரித்தமை, எரிபொருள் விலை குறைவடைந்தமை, வங்கி வட்டி வீதங்கள் குறைவடைந்தமை உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் மூலப்பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கான இயலுமை காணப்படுவதாக வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

தற்போது ஸ்தம்பிதமடைந்துள்ள கட்டுமானத்துறையை மீளக் கட்டியெழுப்புவதற்கு மூலப்பொருட்களின் விலைகளைக் குறைப்பது மிகவும் முக்கியமானது எனவும் அவர் கூறினார். (அ)

# இலங்கையில் முதன்முறையாக திருநங்கைகள் மத்தியில் எச்.ஐ.வி

கொழும்பு, ஜுன் 22

இலங்கையில் முதன்முறையாக திருநங்கைகள் மத்தியில் எச்.ஐ.வி நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய எயிட்ஸ்ஃ பாலியல் நோய் கட்டுப்பாட்டுத் திட்டம் தெரிவித்துள்ளது.

அதன்படி, 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் ஒன்பது எச்.ஐ.வி நேர்மறை திருநங்கைகள் பதிவாகியுள்ளனர்.

இதற்கிடையில், 2023 ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலகட்டத்தில் மொத்தம் 165 எச்.ஐ.வி நோயாளர்கள் பதிவுயுள்ளனர்.

2009 இற்குப் பிறகு முதல் காலாண்டில் பதிவான அதிகபட்ச தொற்றாளர்கள் இதுவாகும்.

மொத்த தொற்றாளர்களில், 22 ஆண்களும் மூன்று பெண்களும் 15-24 வயதுக்கு இடைப்பட்டவர்கள், ஏனையவர்கள் 25 வயதுக்கு மேற்பட்ட நபர்கள்.

சோதனை திறன் அதிகரிப்பு காரணமாக நாடு முழுவதும் அதிகமான தொற்றாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதற்கு காரணமாகும்.

அதிகமான நோயாளர்கள் மேல் மாகாணத்தில் இருந்து பதிவாகியுள்ளனர். (அ)

# ஜோன்ஸ்டன் வழக்கின் சாட்சி வெளிநாட்டில்!

கொழும்பு, ஜுன் 22

சதொச ஊழியர்களை பணியிலிருந்து விலக்கி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் முதலாவது சாட்சியாளர் வெளிநாட்டில் தங்கியிருப்பதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, லஞ்ச ஊழல் ஆணைக்குழு சார்பில் ஆஜரான பிரதிப் பணிப்பாளர் கங்கா ஹெய்யன்துடுவ, சதொச நிறுவனத்தின் முன்னாள் பிரதிப் பொது முகாமையாளர் விபுல கித்சிறி சில்வா கடந்த ஆண்டு ஓய்வு பெற்று டுபாய்க்கு சென்றுள்ளதாக நீதிமன்றில் அறிவித்தார்.

சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு, வழக்கின் மூன்றாவது அரசு தரப்பு சாட்சிக்கு ஒக்ரோபர் 12 ஆம் திகதி நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்குமாறு அழைப்பு அனுப்பப்பட்டது. இந்த வழக்கு ஒக்ரோபர் 12 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வர்த்தக அமைச்சராக கடமையாற்றியபோது, ச.தொ.ச முன்னாள் தலைவர் எராஜ் பெர்னாண்டோ மற்றும் முன்னாள் அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் ராஜ் மொஹிதீன் மொஹமட் சக்கீர் ஆகியோர் கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவன ஊழியர்களை தேர்தல் பணிக்கு நியமித்ததன் மூலம் அரசுக்கு சட்டவிரோத நஷ்டத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

# விமான தாமதங்களை தவிர்க்க முடியவில்லை!

கொழும்பு, ஜுன் 22

பொறுப்பற்ற விமான தாமதங்களால் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டு வருவதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் தயாசிறி ஜயசேகர எழுப்பிய விவகாரமொன்றில் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

கொரியாவுக்கு வேலைவாய்ப்புக்காக நேற்று முன் தினம் புறப்படவிருந்த குழுவினர் விமானத் தாமதம் காரணமாக திருப்பியனுப்பப்பட்டுள்ளனர். அவர்களை வரவேற்க காத்திருந்த கொரியா பிரதிநிதிகள் காத்திருந்து திரும்பிச் சென்றுள்ளனர்.



இந்த விவகாரம் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தயாசிறி கேள்வியெழுப்பினார்.

இந்த விவகாரத்தை அமைச்சர் மனுஷ நாணயக்கார ஏற்றுக் கொண்டார்.

எவ்வளவுதான் நடவடிக்கையெடுத்தாலும், 10 மணித்தியாலம், ஒரு நாள் என விமான தாமதம் நிகழ்வதாக அவர் குறிப்பிட்டார். அது பற்றி மீண்டும் மீண்டும் பேசினாலும் செவிடன் காதில் ஊதிய சங்காகவே அமைந்துள்ளது.

கொரியாவுக்கு குறிப்பிட்ட நேரத்தில் விமானம் செல்ல முடியவில்லை. அவர்கள் தாமதமாகச் செல்வதை ஏற்கவில்லை. அடுத்த வாரமளவில் சிங்கப்பூர் ஊடாக அவர்களை அனுப்ப நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதமளவில் கொரியாவுக்கு நேரடியாக விமான சேவை இடம்பெறும்-என்றார் அமைச்சர் மனுஷ. (அ)

# பணமோசடி விவகாரத்தில் கஹந்தகமவுக்கு மறியல்

கொழும்பு, ஜுன் 22

வீடு கட்டித் தருவதாகக் கூறி 70 இலட்சம் ரூபா மோசடி செய்த குற்றச்சாட்டில் கொழும்பு மோசடி விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட பொதுஜன பெரமுனவின் முன்னாள் மாநகர சபை உறுப்பினர் மகிந்த கஹந்தகமவை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான மெட்ரோ வீட்டுத் தொகுதியில் வீடொன்றை வழங்குவதாகக் கூறி முறைப்பாட்டாளரிடம் 70 இலட்சம் ரூபா பணத்தை பெற்றுக் கொண்டு சந்தேகநபர் மோசடி செய்துள்ளதாக கொழும்பு மோசடி விசாரணைப் பிரிவினர் நீதிமன்றில் அறிவித்துள்ளனர். இரண்டு தடவைகள் காசோலைகள் மற்றும் பணத்தின் ஊடாக இந்த தொகையை சந்தேக நபருக்கு வழங்கியிருந்தார்.

இதன்படி, சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக கொழும்பு மோசடி விசாரணைப் பிரிவினர் நீதிமன்றில் உண்மைகளை முன்வைத்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கண்டியைச் சேர்ந்த ஜயந்த முனவீர என்பவர் கொழும்பு மோசடி விசாரணைப் பணியகத்தின் பிரிவு 07க்கு முறைப்பாடு செய்திருந்தார். (அ)

# ஆலயங்களில் வாணவேடிக்கை நிறுத்தப்படுவது அவசியமானது!

## ஆறு. திருமுருகன் வேண்டுகோள்



யாழ்ப்பாணம், ஜூன் 22

**ஆலயங்களில் வாண வேடிக்கை நிகழ்வுகள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் பக்திக்கான முழுமையான இடமாக ஆலயம் மிளிரவேண்டும் என சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.**

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற உள சமூக அமைய கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மலையகத்தில் சிவபூமி அறநெறிப்பாடசாலை மாணவர்களின் முன்னுதாரணத்தை யாழ். மாணவர்களும் பின்பற்றவேண்டும். மரண நிகழ்வின்போது காசை கரியாக்கிச் சூழலை மாசுபடுத்தி பாடசாலை மற்றும் வைத்தியசாலை என்றும் பாராது அனைத்து இடங்களிலும் வெடி கொளுத்தும் ஈனச்செயல் எம் மண்ணிலிருந்து ஒழிக்கப்படவேண்டும்.

ஆலயங்களில் வாண வேடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். பக்திக்கான முழுமையான இடமாக ஆலயம் மிளிரவேண்டும். வாராந்தம் வரும் பக்தர்கள் அதிகரிக்கவேண்டும். ஆலயம் அறப்பணி மையமாக கொண்டு மிளரவேண்டும்.

சிக்கனத்திற்கும் புண்ணியத்திற்கும் பண்பாட்டுக்கும் பெயர் போன தமிழ்ச்சமூகம் தன் பண்டைய பெருமையை மீட்க வேண்டும்.

அத்துடன் குடும்பத்தோடு வெள்ளிக்கிழமைகளில் ஆலயங்களிலும் ஞாயிறு காலை அறநெறிக்கும் ஞாயிறு மாலை உறவுகள் வீட்டுக்கும் சென்று கூடி குதூகலிக்க-மூத்தோரின் இனிய வழிகாட்டல்களைப் பெற குழந்தைகளுக்கு வழி ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்கு பெற்றோர் தம்மை அர்ப்பணிக்கவேண்டும்-என்றார். (அ)

# இஸ்ரேலில் நோயாளர் பராமரிப்புக்கு பணியாளர்களை அனுப்ப நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 22

இஸ்ரேலில் நோயாளர் பராமரிப்பு சேவைக்கு, பணியாளர்களை அனுப்புவதற்கான பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இஸ்ரேலில் பராமரிப்புப் பணிகளுக்காக பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பாக அந்த நாட்டுப் பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சருடன் கலந்துரையாடியது.

இதன்போது, குறித்த துறையில் ஆட்சேர்ப்பை துரிதப்படுத்துவதற்கு அந்தக் குழுவினர் இணக்கம் தெரிவித்துள்ளனர். (அ)

# தார்மீக அரசுகள் எங்குமே இல்லை

## சபையில் கூறினார் குமார வெல்கம



கொழும்பு, ஜூன் 22

எனக்குத் தெரிந்தவரை எங்கும் தார்மீக அரசுகள்-பண்பாடுடைய அரசுகள் எங்கும் இல்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எனது நண்பர் டலஸ் அழகப்பெரும நல்லொழுக்கமுள்ள அரசாங்கங்களைப் பற்றி பேசினார். எங்கும் பண்பாடுடைய நல்லொழுக்கமுள்ள அரசுகள் இல்லை என்று சொல்கிறேன்.

பிரிட்டன் ஒரு கண்ணியமான நாடு. பிரிட்டன் இளவரசர் சார்லஸ் அரியணை ஏறிய போது, அந்நாட்டு குடிமக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

ஆனால் முடிசூட்டு விழா முடியும் வரை ஊடகங்களில் காட்டப்படவில்லை. பிரிட்டன் ஒரு தார்மீக அரசாங்கம் என்று சொல்ல முடியுமா?

ஏனென்றால் எனக்குத் தெரிந்தவரை எங்கும் தார்மீக அரசுகள் இல்லை. டலஸ் அழகப்பெரும என்னை மன்னிக்கவும்-என்றார். (அ)

# சுற்றுலா, விருந்தோம்பல் முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தினால் நடாத்தப்படவுள்ள சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த ஒரு வருட காலக் கற்கை நெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம் மாதம் 28 ஆம் திகதி ஆகும்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தியடைந்த அல்லது கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்து ஒரு வருடகால துறை சார் அனுபவமுடைய யாவரும் இக்கற்றை நெறிக்காக விண்ணப்பிக்கமுடியும் என்றும், விண்ணப்பிக்க விரும்புபவர்கள் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தில் விண்ணப்ப படிவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் கற்கை நெறியின் இணைப்பாளர் பேராசிரியர் சி.சிவேசன் அறிவித்துள்ளார். (அ)

# இராணுவத்தின் உணவு கொடுப்பனவு அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 22

இராணுவத்தளபதி விகும் லியனகேயின் வேண்டுகோளின் பேரில் இராணுவத்தினருக்கான உணவுக் கொடுப்பனவுத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதியை முப்படைகளின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள்ளார்.

2022 ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலையினால் ஏற்பட்ட பொருளாதார அழுத்தத்தை குறைக்கும் வகையில், இராணுவம் அனைத்து இராணுவ உறுப்பினர்களின் உணவுக்கான கொடுப்பனவுத் தொகையை தோராயமாக 10,000 ரூபாவினால் அதிகரித்துள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே விடுத்த கோரிக்கைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கீகாரம் வழங்கியுள்ள தாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத் தெரிவித்தார்.

அதன்படி, 2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் அனைத்து இராணுவ வீரர்களின் மாதாந்த உணவுக்கான கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், மே மாதம் முதல் அனைத்து இராணுவ வீரர்களின் சம்பளத்துடன் அது சேர்க்கப்பட்டுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.நிர்வாகக் கடமைகள் காரணமாக இது வரை காலதாமதமாகி வந்த ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்கான நிலுவைத் தொகையை தமது சம்பளத்துடன் சேர்க்க நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது. (அ)



# கனகராயன்குளம் ம.வியின் நூற்றாண்டு விழா நிகழ்வு

வவுனியா, ஜூன் 22

வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தின் நூறாவது ஆண்டு விழாவின் முதலாம் நாள் நிகழ்வானது நேற்று முற்பகல் 10 மணியளவில் பாடசாலை வளாகத்தில் மிகச்சிறப்பாக ஆரம்பமாகியது.

இந்த விழாவில் விருந்தினர்கள் பாண்ட் வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டதுடன் பிரதம விருந்தினரான வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸினால் நுழைவாயில் பெயர்ப் பலகை திரைநீக்கம் செய்யப்பட்டு நாடா வெட்டி திறந்து வைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து புதிதாக அமைக்கப்பட்ட திருவள்ளுவர் சிலை, பண்டாரவன்னியன் சிலை, அப்துல்கலாம் சிலை ஆகியன திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டன.

பாடசாலையின் அதிபர் குலேந்திரகுமார் தலைமையில் ஆரம்பமான இந்த விழாவில் கௌரவ விருந்தினர்களாக வவுனியா வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் லெனின் அறிவழகன்,பழைய மாணவன் இராசரத்தினம் (அவுஸ்திரேலியா), மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் ந.ஞானசுந்தரம், பழைய மாணவர் சங்கம் லண்டன் கிளையின் சி.தவமோகன், பழைய மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 9ஏ பெற்ற மாணவர்கள், 2021 இல் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்கள், 2021 இல் பல்கலைக்கழகம் சென்ற மாணவர்கள், 2022 இல் எறிபந்தில் தேசியம் சென்ற அணி போன்ற மாணவர்களுக்கு கௌரவிப்பு இடம்பெற்றது. (அ)

# வடமராட்சி கிழக்கு அம்பனில் 75,000 மீன்குஞ்சுகள் விடப்பட்டன



யாழ்ப்பாணம், ஜூன் 22

நன்னீர் மீன்பிடியாளர் தொழில் மேம்பாடு கருதி வடமாகாண விவசாய அமைச்சின் மீன்பிடிப் பிரிவினரால் நன்னீர் மீன்குஞ்சுகள் விடப்பட்டன.

வடமராட்சி கிழக்கு அம்பன் களப்புப் பகுதியில் 75,000 மீன் குஞ்சுகள் நேற்று விடப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் மீன்பிடிப் பிரிவின் நிதி அனுசரணையில் குறித்த மீன்குஞ்சுகள் அம்பன் பகுதியில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் சுமார் 500 வரையான நன்னீர் மீன்பிடியாளர்களின் தொழில் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு 250,000 மீன் குஞ்சுகள் விடும் திட்டத்தின் கீழ் நேற்று 75,000 மீன்குஞ்சுகள் விடப்பட்டன.

மிகுதி மீன் குஞ்சுகள் நேற்றிலிருந்து தொடர்ச்சியாக நன்னீர் ஏரியில் விடப்படவுள்ளன.

இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண விவசாய அமைச்சின் மீன்பிடி பிரிவு அதிகாரிகள், பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் பிரயந்த அமரசிங்க, அம்பன் நன்னீர் மீன்பிடியாளர் சங்கப் பிரதிநிதிகள், மற்றும் அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# ஜனநாயக நாடுகளில் பின்பற்றப்படும் சட்டங்களை முன்னுதாரணமாக கொள்க!

## அரசிடம் கோருகிறார் டலஸ் அழகப்பெரும

கொழும்பு, ஜூன் 22
ஜனநாயக நாடுகளில் பின்பற்றப்படும் சட்டங்களை முன்னுதாரணமாகக் கொண்டு அரசாங்கம் செயற்படவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- எதிர்க்கட்சித் தலைவர் கூறுவதைப் போன்று இந்த விடயத்தில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளவேண்டும்.

சர்வதேச நாடுகளில் இருப்பதைப் போன்று, ஊடக ஒழுங்கு முறை அவசியம் என்பதை நாமும் ஏற்றுக் கொள்கிறோம்.

1997 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற நீதியரசர் உள்ளிட்ட மூவர் அடங்கிய நிதிபதிகள் குழாமினர், இந்த ஊடக சட்டங்கள் தொடர்பாக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்பொன்றை



வழங்கியுள்ளனர்.

அதாவது, இவ்வாறான சட்டமூலங்களை நிறைவேற்ற பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம் என்பதோடு, சர்வஜன வாக்கெடுப்பும் அவசியம் என அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நீதி அமைச்சரும் அறிவார் என்று நாம் நம்புகிறோம். இவ்வாறான சட்டமூலமொன்று தேவையில்லை என்று இங்கு யாரும் கூறவில்லை.

ஆனால், இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் நிச்சயமாக கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளவேண்டும்.

நவீன ஊடகங்களுக்கு இவ்வாறான நெறிமுறைகள் அவசியம். வளர்ச்சியடைந்த, ஜனநாயக நாடுகளில் பின்பற்றப்படும் சட்டங்களை முன்னுதாரணமாகக் கொண்டு இந்த விடயத்தில் அரசாங்கம் செயற்பட வேண்டும்-என்றார். (அ)

# தெற்கில் 3 துப்பாக்கிச் சூடுகள்!

கொழும்பு, ஜூன் 22
ஹோமாகமை மற்றும் கொஸ்கொட ஆகிய பகுதிகளில் இரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவான சில மணி நேரங்களில் கொட்டாவை - தர்மபால வித்தியாலயத்துக்கு அருகில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று பதிவானது.

இதன் அடிப்படையில் நேற்று முன் தினம் இரவு முதல் நேற்று காலை வரை உறுதிப்படுத்தப்பட்ட 3 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

கொட்டாவை தர்மபால வித்தியாலத்திற்கு அருகில் உள்ள தனியார் பகுப்பாய்வகம் ஒன்றிலே இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் பதிவானது.

சம்பவத்தில் மத்தேகொடை பகுதியைச் சேர்ந்த 33 வயதான ஒருவர் பலியானார்.

நேற்றுக் காலை மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த, அடையாளம் தெரியாத இருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில், குறித்த தனியார் பகுப்பாய்வகத்தில் பணியாற்றிய ஊழியர் ஒருவர் மரணித்தார்.

சந்தேகநபர்களை கைது செய்ய விசாரணை முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# சுமந்திரனை பாராட்டிய அத்துரலிய ரத்ன தேரர்

கொழும்பு, ஜூன் 22
தமிழ் சிங்கள இனவாதமின்றி தெளிவான விளக்கத்தினை எம்.ஏ.சுமந்திரன் முன்வைத்திருந்ததாக எமது மக்கள் சக்தி கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் பாராட்டினார்.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அத்துரலிய ரத்ன தேரர் இதனைக் கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் உரை, தமிழ் சிங்கள இனவாதமின்றி தனியார் மயப்படுத்தலில் இடம்பெறும் கொள்ளையை, விரிவாக வெளிப்படுத்தியிருந்தாக, பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் சுட்டிக்காட்டினார்.

இந்த ஊழல் ஒழிப்புச் சட்டமூலத்திற்கு நாம் ஒத்துழைப்பு வழங்குகிறோம்.ஆனால் இந்த சட்டமூலத்தின் மூலம் எதிர்பார்ப்பு நிறைவேறுமா.? உதாரணமாக ஜப்பான் தூதுவர் காரியாலயத்தில் எயார் லங்கா விமானம் தொடர்பிலான அல்லது வேறு அரச நிறுவனங்கள் தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது அமைச்சர் ஒருவர் டீல் பேசியதாக ஜப்பான் தூதுவர் காரியாலயம் வெளிப்படுத்தியிருந்தது.

ஆனால் குற்றம் சுமத்தப்பட்டுள்ள அமைச்சர் இன்றும் அமைச்சரவை அமைச்சராக பதவி வகிக்கின்றார்.

பொஜன பெரமுன கட்சிக்கு மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கியிருந்தனர். எதற்கு தேர்தல் பிரசாரத்தின் போது பொதுஜன பெரமுன மக்களுக்கு பல வாக்குறுதிகளை வழங்கியது.

குறிப்பாக மத்திய வங்கி பிணைமுறி மோசடியை ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டார் என மக்கள் மத்தியில் அந்த கருத்தை சமூகமயப்படுத்தியே தேர்தலில் வெற்றி பெற்றார்கள்.

ஆனால் இன்று அவர்களே அவரை ஜனாதிபதியாக தெரிவு செய்துள்ளார்கள்-என்றார். (அ)

# சீஷெல்ஸ் - இலங்கை இடையே நேரடி விமான சேவை ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 22
சீஷெல்ஸிற்கும் இலங்கைக்கும் இடையே நேரடி விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, சீஷெல்ஸில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு நேற்று காலை விமானமொன்று வருகை தந்தது.

இந்த விமானத்தில் 110 பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சீஷெல்ஸ் விமான நிறுவனத்திற்கு சொந்தமான விமானம், வாரத்தின் புதன்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அதிகாலை 4 மணிக்கு நாட்டுக்கு வருகை தந்து, மீண்டும் காலை 7.30 மணிக்கு சீஷெல்ஸ் நோக்கி பயணிக்கவுள்ளது. (அ)

# காட்டெருமையை வேட்டையாடிய இரு சந்தேகநபர்கள் கைதாகினர்

ஹற்றன், ஜூன் 22
தேயிலை மலையில் சுற்றித்திரிந்த காட்டெருமையை வேட்டையாடி, இறைச்சியை விற்பனை செய்ய முயன்ற இருவரை ஹற்றன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போடைஸ் தோட்ட, என்.சி பிரிவிலேயே காட்டெருமை வேட்டையாடி இறைச்சியை பொதி செய்து விற்பனைக்காக வைத்திருந்த நிலையிலேயே இருவரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் 54 கிலோ இறைச்சியும் கைப்பற்றப்பட்டது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் ஹற்றன் - போடைஸ் தோட்டத்தை சேர்ந்தவர்களென பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# கடல் சங்குகளுடன் இரண்டு பேர் கைது!

கொழும்பு, ஜூன் 22
கற்பிட்டி பகுதியில் உள்ள வீடொன்றில் சட்டவிரோதமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 3200 கடல் சங்குகளை கற்பிட்டி பொலிஸார் மீட்டுள்ளதாக கல்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

பல்வேறு அளவிலான கடல் சங்குகள் 40 சாக்கு மூட்டைகளில் அடைக்கப்பட்டிருந்தது டன், சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கற்பிட்டி பொலிஸ் விசேட பணியகத்திற்கு கிடைத்த தகவலின் பிரகாரம் கல்பிட்டி பொலிஸ் பரிசோதகர் ஷான் முனசின்ஹ உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 26 மற்றும் 28 வயதுடைய கல்பிட்டியை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி!

கொழும்பு, ஜூன் 22
இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளது.

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 298.47 ரூபாயாக அதிகரித்து விற்பனை விலை 314.49 ரூபாயாக பதிவாகியுள்ளது.

மத்திய வங்கியினால் பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி அறிவிக்கப்பட்ட நாணய மாற்று விகிதத்தின் படி டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி 362.66 ஆகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பயங்கரவாத சட்டம் குறித்து முக்கிய நாடுகள் கரிசனை

கொழும்பு, ஜூன் 22
இலங்கையில், பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்ந்து அமுலில் உள்ளமை குறித்து, ஜெனிவாவில் இயங்கும், இலங்கை தொடர்பான முக்கிய குழு நாடுகள் கரிசனை வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா, கனடா, பிரிட்டன், மொண்டிநீக்ரோ, மலாவி மற்றும் வடக்கு மஸிடோனியா முதலான இலங்கை தொடர்பான முக்கிய குழு நாடுகள் குழு, நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் இடம்பெற்று வருகின்ற நிலையில், முக்கிய குழு நாடுகள் அறிக்கை வெளியாகியுள்ளது.

காணிகளை மீளக் கையளித்தல், நீண்டகால தடுப்பு மற்றும் ஊழல் தொடர்பான நீண்டகால கரிசனைகளை நிவர்த்தி செய்வதற்கான இலங்கையின் ஆரம்ப பக்கட்ட நடவடிக்கைகளுக்கு அந்தக் குழு வரவேற்பு தெரிவித்துள்ளது.

அதேநேரம், பயங்கரவாத தடைச்சட்டத்தை மாற்றுவதற்கான தொடர்ச்சியான முயற்சியை தாங்கள் ஒப்புக்கொள்கின்ற அதேவேளை, அந்த மறுசீரமைப்புகள், இலங்கையின் சர்வதேச கடப்பாடுகளுடன் இணங்கிச் செல்வதை அரசாங்கம் உறுதி செய்யவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடல் உரிமைகளை அரசாங்கம் பாதுகாக்க வேண்டும் என்றும் இலங்கை தொடர்பான முக்கிய குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகள், அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. (அ)

# அவசர விபத்து காரணமாக வருடாந்தம் 12,000 பேர் பலி!

கொழும்பு, ஜூன் 22
நாட்டில் பதிவாகும் பல்வேறு விபத்துகளினால் வருடாந்தம் 40 இலட்சத்துக்கும் அதிகமானோர் காயமடைவதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

பல்வேறு விபத்துகளால் வருடாந்தம் 13 இலட்சத்துக்கும் அதிகமானோர் சிகிச்சைக்காக அரச வைத்தி யசாலைகளில் அனுமதிக்கப்படுவதாக சுகாதார அமைச்சின் தொற்றா நோய் ஆய்வு பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சமித சிறிதுங்க குறிப்பிட்டார்.

அவசர விபத்துகளினால் வருடாந்தம் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை 12000 இற்கும் அதிகமான தாக காணப்படுவதாக அவர் கூறினார்.

இந்த விபத்துகளைத் தவிர்ப்பதற்காக 9 மாகாணங்களையும் உள்ளடக்கி, சுகாதாரப் பிரிவு அதிகாரிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டு வருவதாக விசேட வைத்திய நிபுணர் சமித சிறிதுங்க சுட்டிக்காட்டினார். (அ)

# அமிர்தசரஸ்: தினமும் ஒரு இலட்சம் பேருக்கு இலவச உணவு வழங்கும் 'பட்டினி இல்லாத' நகரம்!



சீக்கிய மதத்தின் இதயமாகக் கருதப்படும் வட இந்திய நகரமான அமிர்தசரஸில் உள்ள பொற்கோவிலில் ஒவ்வொரு நாளும் ஒரு லட்சம் பேருக்கு இலவச உணவு அளிக்கப்படுகிறது.

இருபது லட்சம் பேர் வசிக்கும் அமிர்தசரஸ், பல விஷயங்களுக்காக எல்லோராலும் புகழப்படும் நகரமாக விளங்குகிறது. சுவையான உணவு, வரலாற்றுச் சிறப்புமிக்க மிகப்பழைய நகரம், மற்றும் காண்போரின் கண்களைக் கவரும் சீக்கிய மதத்தின் மிக முக்கிய வழிபாட்டுத் தலமான பொற்கோவில் என பல சிறப்புகள் உள்ளன.

இதையெல்லாம் விட, பெருந்தன்மை என்ற ஒரு உணர்வின் காரணமாகவே அந்நகர் போற்றப்படுகிறது என்ற உண்மைதான் மிகவும் ஆச்சரியமூட்டும் சிறப்பாக அமைந்துள்ளது.

அமிர்தசரஸ் நகரம் 16ம் நூற்றாண்டில் சீக்கிய மதகுரு ஒருவரால், சீக்கிய மதம் பிறந்த நிலமான பஞ்சாபில் நிறுவப்பட்ட ஒரு நகரம். சீக்கிய மதம் என்பது எந்த பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் பிறருக்கு உதவி செய்வதை அடிப்படையாகக் கொண்ட மதம் என எல்லோராலும் பார்க்கப்படுகிறது.

உலகம் முழுவதும் சீக்கியர்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள குருத்வாராக்களில் (சீக்கியர்களின் கோயில்) தூய்மைப் பணிகள், உணவு அளித்தல், கோயிலுக்கு வருபவர்களை ஒழுங்குபடுத்துவது போன்ற சிறுசிறு சேவைப் பணிகளில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். மற்றவர்கள் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில், பெருந்தன்மையின் அடிப்படையில் பல்வேறு சேவைகளை மற்றவர்களுக்கு அளித்துவருகின்றனர்.

### கொரோனா பாதித்த போது உலகம் முழுவதும் சீக்கியர்கள் அளித்த சேவை

ஏப்ரல் 2021ல் இந்தியா முழுவதும் கொரோனாவின் பிடியில் சிக்கித் தவித்தபோது, மருத்துவமனைகளில் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தவர்களுக்கு ஆக்ஸிஜன் சிலிண்டர்களை வழங்குவது மற்றும் மருத்துவ உதவிகளை அளிப்பது என பல்வேறு சேவைப் பணிகளில் சீக்கியர்கள் மிக அதிகமாக ஈடுபட்டனர்.

"சேவை என்பது தன்னலமற்ற ஒரு தொண்டு. சீக்கிய மதத்தில் அது வெறும் உபதேசமாகவோ, அல்லது ஒரு வழிகாட்டியாகவோ இல்லாமல் ஒரு தினசரி நடவடிக்கையாகவே அனைவரும் சேவைகளில் ஈடுபட்டு வருகின்றனர்," என, 'சேவை: நல்லதைச் செய்வதன் மூலம் சிறப்பாக வாழ்வது என்ற சீக்கியர்களின் ஞானம்' (சேவா: சிக் விஸ்டம் ஃபார் லிவிங் வெல் பை டூயிங் குட்) என்ற பெயரில் ஆங்கில நூலை எழுதிய ஜஸ்ரீன் மயல் கண்ணா என்ற எழுத்தாளர் குறிப்பிடுகிறார்.

"சேவையின் மற்றொரு பெயர் என்னவென்றால் அது தான் அன்பு" என்கிறார் 23 வயதான அபிநந்தன் சௌத்ரி. இவர் தமது எட்டு வயதில் தொடங்கி, குடுபத்தினருடன் இணைந்து இது போன்ற சேவைகளை அளித்து வருகிறார். "ஒரு பொதுவான உபதேசம் என்னவென்றால், முழுக்க முழுக்க தன்னலமற்ற ஒரு சேவையை நீங்கள் பிறருக்கு அளிக்கவேண்டும். உங்களுடைய சேவை உங்களைப் பெருமைப்படுத்திக்கொள்வதற்காக இருக்கக்கூடாது. நீங்கள் அளிக்கும் சேவைகளை யாரும் அறியவேண்டும் என்பதற்காக செய்யாதீர்கள்," என்பதே ஆகும்.

சீக்கிய மதத்தில் உள்ள பெருந்தன்மையை உலகம் முழுவதும் நம்மால் பார்க்கமுடியும். கொரோனா பாதிப்பின் உச்சகட்டத்தின் போது, இங்கிலாந்தில் உள்ள ஒரு குருத்வாராவில் சீக்கிய தன்னார்வலர்கள் தினமும் ஆயிரக்கணக்கான மருத்துவப் பணியாளர்களுக்கு உணவளித்தனர்.

இதே போல் அமெரிக்கவிலும் நாடு முழுவதும் சீக்கியர்கள் தினமும் உணவு சமைத்து ஏராளமான பொதுமக்களுக்கு இலவசமாக அளித்தனர். ஒரு பிரச்சினை ஏற்படும் போது, அவசர காலத்தில்- அது கனடாவில் புயல் பாதிப்பு ஏற்பட்ட போதோ அல்லது நியூசிலாந்து மக்கள் புயல் மற்றும் பலத்த மழை பாதிப்புக்கு உள்ளான போதோ, சீக்கியர்கள் தங்கள் முழு பலத்தையும் பயன்படுத்தி பிறருக்கு உதவுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

### உலகிலேயே மிகப்பெரிய சமூக சமையல் கூடம்

ஆனால் சீக்கிய மதத்தின் இதயம் போன்ற அமிர்தசரஸ் நகரில் மேலும் சிறப்பான முறையில் இந்த சேவை நிறைவேற்றப்படுகிறது. அமிர்தசரஸ் நகரில் இதுவரை உணவின்றி இரவில் தூங்கச் சென்ற நபர் யாருமே இல்லை என்பது இந்தியா முழுவதும் அறிந்த விஷயமாகும். இதற்கு ஒரே காரணம், அங்குள்ள சீக்கியர்களின் புனிதத் தலமான பொற்கோவிலில் எப்போது யாருக்கு உணவு வேண்டுமென்றாலும் அப்போது அது அளிக்கப்படும்.

பொற்கோவிலில் உள்ள சமையற்கூடம் தான் உலகிலேயே மிகப்பெரிய, சேவை அடிப்படையில் செயல்படும் சமையற்கூடமாகக் கருதப்படுகிறது. இங்கு ஒவ்வொரு தினமும் ஒரு லட்சம் பேருக்கு உணவு சமைக்கப்படுகிறது. 24 மணிநேரமும் உணவு தேவைப்படும் எவரும், எந்த பாகுபாடும் இன்றி இங்கு வந்து உணவு உண்டு செல்லலாம்.

கொரோனா பாதிப்பின் போது பல லட்சம் பேருக்கு உணவு விநியோகம் செய்த, நியூயார்க் நகரில் உள்ள மிஷலின்-ஸ்டார் உணவகத்தின் சமையல் கலைஞரான விகாஸ் கண்ணா இது பற்றி கூறுகையில், "நான் அமிர்தசரஸ் நகரில் தான் பிறந்து வளர்ந்தேன். அங்கு தான் எல்லோருக்கும் உணவளிக்கும் மிகப்பெரிய சமையல் கூடம் உள்ளது. அந்த நகரில் வாழும் அனைவரும் அங்கே உணவு உட்கொள்ள முடியும். நான் நியூயார்க்கில் உணவின்றித் தவித்த போது எனக்கு ஏற்பட்ட மனநிலையே பசிக்கொடுமையை எனக்கு உணர்த்தியது."

எல்லா குருத்வாராக்களைப் போலவே பொற்கோயிலும் தன்னார்வலர்களின் ஒத்துழைப்புடன் பசித்தோருக்கு சுவையான உணவு அளித்துக்கொண்டு அமைதியாக ஒரு பெரும் சேவையைச் செய்துவருகிறது. சப்பாத்தி, பருப்பு வகைகள், கொண்டைக்கடலை சுண்டல், தயிர் சாதம் உள்ளிட்ட உணவு வகைகள் சுவையுடன் அளிக்கப்படுகின்றன. உணவு அருந்துவதற்கான ஒவ்வொரு அறையிலும் சுமார் 200 பேர் ஒரே நேரத்தில் சாப்பிட முடியும்.

அனைவரும் தரையில் அமர்ந்து உணவு உண்ணும் வழக்கம் அங்கே காணப்படுகிறது. ஏராளமான ஆண்களும், பெண்களும், வயதானவர்களும், ஏழை மற்றும் வசதிபடைத்தவர்களும் அங்கே உணவு அருந்துகின்றனர். ஒரு சிலருக்கு அதிக உணவு தேவைப்பட்டாலும் அவர்களுக்குத் தேவையான அளவுக்கு உணவு அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு 15 நிமிடங்களுக்கு ஒரு முறையும் உணவு அருந்தும் அறைகள் தூய்மைப்பணியில் ஈடுபட்டுள்ள தன்னார்வலர்களால் சுத்தம் செய்யப்படுகிறது. இந்த தூய்மைப் பணி என்பது ஆண்டு முழுவதும் எந்த விடுமுறையும் இன்றி மேற்கொள்ளப்படுகிறது.

### அனைத்து இடங்களிலும் காணப்படும் பெருந்தன்மை

பொற்கோவிலில் இருந்து சாதாரண தெருக்கள் வரை நட்புணர்வுடன் பெருந்தன்மை மிக்க உதவி என்பது எப்போதும் எல்லோருக்கும் கிடைக்கும் உதவியாகவே உள்ளது. நாங்கள் அங்கே சென்ற போது, அங்கே இருந்த ஒவ்வொருவரும் தாமாகவே சிரித்த முகத்துடன் முன் வந்து, எங்களுக்கு ஏதாவது உதவி வேண்டுமா எனக் கேட்டனர். இது போன்ற ஒரு நிலையை எங்கும் பார்த்ததில்லை என்பதால் நாங்கள் மட்டுமே ஒரு குழப்ப மனநிலையுடன் அங்கே ஒவ்வொரு இடத்துக்கும் சென்றுகொண்டிருந்தோம்.

மிகச் சில இடங்களில் தான், எங்களுடைய பைகள் மற்றும் உடைகளை பாதுகாப்பாக வைத்திருக்க ஒரு சிலர் அறிவுறுத்தினர். மிகவும் புகழ்பெற்ற கேசர் டா தாபா என்ற ஒரு உணவகத்தில் எப்போதும் நீண்ட நேரம் காத்திருந்தால் மட்டுமே உணவு உண்ண முடியும். அங்கே உணவருந்திக் கொண்டிருந்த நபர்கள் கூட, அவர்கள் நெருங்கி அமர்ந்துகொண்டும் முகத்தில் புன்னகையுடன் பிறருக்கு இடமளித்த விதம் எங்களை வெகுவாகக் கவர்ந்தது.

"அமிர்தசரஸ் நகரில் வளர்ந்தது, ஒரு மிகப்பெரும் சமூகத்துடன் சேர்ந்து வாழ்ந்த அனுபவத்தை அளித்தது," என அங்கே பிறந்து வாழ்ந்த ராஹத் ஷர்மா என்பவர் கூறினார்.

'நான் சிறுவயதில் இருந்த போது பொற்கோவிலில் சேவை அளித்துக் கொண்டிருந்ததும், அங்கே கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடிய அனுபவமும் எனக்கு இருக்கிறது. அங்கே சீக்கியர்களும், இந்துக்களும் இணைந்து இது போல் சேவைப் பணிகளை மேற்கொண்டோம். எங்களைப் பொறுத்தளவில் இந்துக்களும், சீக்கியர்களும் இணைந்தே வெகு அமைதியாக அமிர்தசரஸ் நகரில் வசித்து வருகிறோம்."

அமிர்தசரஸ் நகரம் எவ்வளவுக்கு எவ்வளவு ஒரு புனிதமான நகராக கருதப்படுகிறதோ, அந்த அளவுக்கு அந்த நகரம் ஒரு வலிமையான நகரமாகவும் இருக்கிறது என்பது மட்டுமல்ல, அது ஒரு மிகச்சிறந்த வாழிடமாகவே உணரப்படுகிறது. அங்கே சாதாரணமாகக் காணப்படும் உணவகங்களில் கிடைக்கும் ரொட்டிகள், கொண்டைக் கடலை சுண்டல், அரிசி மாவு போன்றவை பாரம்பரியம் மிக்க மண் சட்டிகளில் வைத்து வழங்கப்படுகின்றன. அவற்றுடன் வழங்கப்படும் மோர் போன்ற உணவுகள் மிகவும் சுவையான உணவாக இருக்கும்.

பருப்பு, சப்பாத்தி, பருப்பு கறி மற்றும் தயிர் அடங்கிய உணவு அனைவருக்கும் ஸ்டீல் தட்டுகளில் நாள் முழுவதும் வழங்கப்படுகிறது. சிலர் கூடுதல் உணவை கேட்பார்கள். சிலர், தட்டில் இருப்பதை சாப்பிட்டுவிட்டு கிளம்பிவிடுவார்கள்.

அமிர்தசரஸ் நகருக்கு இப்படி மகத்தான பல பெருமைகள் இருந்தாலும், சீக்கியர்களின் சுய கருத்து மற்றும் இயக்கவியல் வலுப்பெற்ற காலம் என்ற ஒரு சமகால வரலாறும் உண்டு.

பஞ்சாபின் இரண்டாவது பெரிய நகரமான, அமிர்தசரஸில் பிரிட்டிஷ் காலனி ஆட்சியின் போது கூட்டங்கள் மற்றும் போராட்டங்கள் அடிக்கடி நடந்திருக்கின்றன. 1919 ஆம் ஆண்டில், நடந்த ஜாலியன் வாலாபாக் படுகொலையும் இந்நகரில் தான் நடந்துள்ளது. இந்த படுகொலைச் சம்பவத்தின் போது சுமார் 1,500 பேர் உயிரிழந்தனர்.

மேலும், 1947 இல் ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டு அவசரமாக வெளியேறியபோது, புதிதாக உருவாக்கப்பட்ட இந்திய எல்லைக்கு அருகே இந்நகரம் இருந்ததால் பிரிவினையின் போது ஏற்பட்ட வன்முறைகள் இந்நகரை வெகுவாகப் பாதித்தன. (இதன் நினைவாக, இந்தியாவின் முதல் மற்றும் ஒரே பிரிவினை அருங்காட்சியகம் அமிர்தசரஸில் 2017 இல் திறக்கப்பட்டது.)

1984ல் அமிர்தசரஸ் மீண்டும் ஒரு சோகத்தைச் சுமக்கும் நகராக மாறியது. அப்போதைய இந்திய பிரதமர் இந்திரா காந்தி பொற்கோவிலுக்குள் ராணுவத்தை அனுப்பி பிரிவினைவாதிகளைக் கைது செய்ய முயன்றதன் தாக்கம் இன்றும் எதிரொலிக்கிறது. இந்திரா காந்தியின் இந்நடவடிக்கையின் காரணமாகவே அவர் படுகொலை செய்யப்பட்டார். அதைத் தொடர்ந்து சில நாட்களில் பல்லாயிரக்கணக்கான அப்பாவி சீக்கியர்களும் படுகொலை செய்யப்பட்டனர்.

இது போன்ற சம்பவங்களின் நினைவலைகளைப் பாதுகாத்து வைப்பது சீக்கியர்களுக்கு மிகமுக்கிய பணியாக உள்ளது. சீக்கிய தியாகிகள் பற்றிய கதைகள் அவர்களுடைய கலாச்சாரத்தின் ஒரு பகுதியாகவே மாறியுள்ளன. இறைவழிபாட்டின் போது கூட அவை நினைவு கூரப்படுகின்றன. குருத்வாராக்கள் தினமும் திறக்கப்படும் போது பாடப்படும் பாடல்களிலும் இது போன்ற கதைகள் இடம்பெறுகின்றன. "ஆனால் இந்த கதைகள் பழி வாங்கும் நோக்கிலோ, பிறர் மீது வெறுப்பை ஏற்படுத்தும் நோக்கிலோ மீண்டும் மீண்டும் சொல்லப்படும் கதைகள் அல்ல. மாறாக, எங்களைக் காத்தவர்களை அவர்களின் மறைவுக்குப் பின்னும் போற்றவேண்டும் என்பதே இதன் நோக்கம்," என்கிறார் கண்ணா.

அதனால் தான் இந்த சமூகம் பல பேரதிர்ச்சிகளை எதிர்கொண்ட போதிலும், எதையும் தாங்கிக் கொண்டு வாழும் ஒரு சமூகமாக எப்போதும் போல் சேவையை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்து வருகிறது. சீக்கிய மதத்தைத் தோற்றுவித்த குரு நானக், சேவையை சீக்கியர்களின் ஒரு வழிபாட்டு முறையாக ஆக்கினார். இதன் காரணமாகவே சீக்கியர்கள் தங்கள் குருக்களின் சொற்கள் மற்றும் செயல்களால் ஈர்க்கப்பட்டு தன்னலமின்மையை தங்கள் வாழ்க்கையின் ஒரு பெரிய அங்கமாக மாற்றிக் கொள்கின்றனர்."

சீக்கியர்களின் பாரம்பரியமாகத் தொடரும் சேவை மனப்பான்மை தான் எந்த ஒரு பாகுபாடுமில்லாமல் எந்த மதம் மற்றும் இனத்தைச் சேர்ந்தவர்களிடமும் ஒரு பெருந்தன்மையுடன் நடந்துகொள்ள அவர்களை பக்குவப்படுத்துகிறது. அமிர்தசரஸைப் பொறுத்தளவில் அந்நகருக்கு நன்மைகள் ஏற்பட்டாலும், தீமைகள் ஏற்பட்டாலும் அனைத்தையும் கடந்து மனிதர்களிடத்தில் மிகுந்த பெருந்தன்மையுடனும், அன்புடனும் பழகுவது எப்போதும் தொடரும் என்பதை யாரும் மறுக்க முடியாது.

# மக்களின் தேவைகளையும் அபிலாசைகளையும் நிறைவேற்ற அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கவேண்டும்

நாட்டில் நிலைவரம் மேம்பட்டுவருவதன் அறிகுறியாக தற்போதைய உறுதிப்பாட்டு நிலையை கருதமுடியும். சட்டம் ஒழுங்கு நிலைவரத்தில் காணப்படக்கூடியதாக இருக்கும் முன்னேற்றம், எரிபொருள் நிரப்பு நிலையங்கள் முன்பாக நீண்ட வரிசைகளில் மக்கள் இரவுபகலாக காத்துக்கொண்டிருந்ததைப் போன்ற வெளியில் தெரியக்கூடிய பொருட்கள் தட்டுப்பாடு இல்லாத நிலை பணவீக்கத்தின் வீழ்ச்சி ஆகியவை ஒரு வருடத்துக்கு முன்னர் இருந்த நிலைவரத்துடன் ஒப்பிடும்போது பெரிய மாற்றத்தை குறித்து நிற்கின்றன.

ஆனால் தட்டுப்பாடுகள் தொடருகின்றன. உடல் வரட்சியை தடுப்பதற்கு அவசியமான 'ஜீவனி' க்கு தட்டுப்பாடு காணப்படுகிறது. டெங்கு போன்ற நோய்களுக்கு சிகிச்சை பெறுபவர்கள் மற்றும் விளையாட்டுக்களில் ஈடுபடுபவர்களுக்கு 'ஜீவனி ' அவசியமானதாகும். அதை உள்ளூரில் தயாரிப்பதற்கு தேவையான மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதில் உள்ள பிரச்சினைகளே தட்டுப்பாட்டுக்கு காரணம் என்று கூறப்படுகிறது. 'ஜீவனி'க்கு மாற்றாக பயன்படுத்தக்கூடிய ஔடதங்கள் இருக்கின்ற போதிலும் அவற்றின் விலை இரண்டு மடங்காக உள்ளது. தங்களது வருமானத்திற்குள் வாழ்க்கையை சமாளிக்கக்கூடியவர்களாக இருக்கும் மக்கள் பிரிவினர் மேலோட்டமாக நிலைவரங்களை நோக்கி, நாட்டில் வழமைநிலையை உறுதிப்படுத்துவதில் அரசாங்கம் கண்டிருக்கும் வெற்றியை பொதுவில் பாராட்டுகிறார்கள்.

தற்போதைய உறுதிப்பாட்டு நிலை நாட்டின் பொருளாதார மீட்சிக்கான அடிப்படையாக அமையமுடியும். ஊழலைக் கட்டுப்படுத்தி, பொறுப்புக்கூறலை மேம்படுத்தி, நிலைபேறான கொள்கைகளின் மூலமாக முதலீட்டாளர்களின் நம்பிக்கையை உறுதிசெய்வது அவசியமாகிறது. முதலீடுகளின் மூலமாக தாங்கள் அடையக்கூடிய பயன்களை பாதிக்கும் வகையிலான கொள்கை மாற்றங்கள் குறித்து முதலீட்டாளர்களுக்கு இருக்கும் அச்சம் இலங்கையில் சர்வதேச முதலீடுகள் தாழ்ந்த நிலையில் உள்ளதற்கான பிரதான காரணங்களில் ஒன்றாகும்.

மேற்கூறப்பட்ட காரணிகள் இல்லாத நிலைமையிலும் கூட பொருளாதாரம் சீரடைந்து வருகிறது என்று அரசாங்கம் உரிமை கோருவதற்கு முரணாக இரு யதார்த்த காரணிகள் அமைகின்றன. முதலாவது காரணி சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் தரவுகள். இந்த வருடத்தின் முதற் காலாண்டில் நிகர உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை 11.5 சதவீதமாக திணைக்களம் மதிப்பிட்டிருக்கிறது. இது எதிர்மறையான வளர்ச்சியாகும். கடந்த வருடத்தைய பொருளாதார குறுக்கம் 9.2 சதவீதமாக இருந்தது.

பொருளாதார நிலைவரம் பற்றிய தோற்றப்பாட்டை தடுமாற்றத்துக்கு உள்ளாக்கும் இரண்டாவது புள்ளிவிபரம் இலங்கை நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியாகும். கடந்த சில வாரங்களாக ஏற்பட்டுவந்த நாணயத்தின் பெறுமதி அதிகரிப்பு பொருளாதாரம் வலுவடைந்து வருவதன் சான்றாக நோக்கப்பட்டது. ஆனால், மீண்டும் நாணயப் பெறுமதி வீழ்ச்சியடைவதை காணக்கூடியதாக இருக்கிறது. பொருளாதாரத்தை கையாளுவதில் அரசாங்கம் வெளிக்காட்டும் ஆற்றல் தொடக்கம் வெளிநாடுகளில் வேலைசெய்யும் இலங்கையர்களின் அனுப்பீடுகள் அதிகரிப்பு மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு வரை பொருளாதாரம் வலுவடைந்து வரவதற்கான பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன.

இறக்குமதிகள் மீதான இறுக்கமான கட்டுப்பாடுகள், சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டலுடனான கடன் மறுசீரமைப்பு செயன்முறைகள் பூர்த்தியடையும் வரை வெளிநாட்டு கடன்களை மீளச்செலுத்தாமல் இருக்கக்கூடியதாக இருக்கின்றமை போன்ற காரணிகளின் பின்புலத்திலேயே இலங்கை நாணயத்தின் பெறுமதியில் அதிகரிப்பு ஏற்படுகிறது என்ற உண்மை மூடிமறைக்கப்படுகிறது.

### மனித அவலம்

பொருளாதார வசதிகள் உள்ளவர்களும் நாணய பரிமாற்ற விவகாரங்களில் உண்மையில் என்ன நடக்கிறது என்பதை உயர்மட்ட தொடர்புகளின் மூலமாக அறிந்துகொள்க்கூடியவர்களும் குறைந்த ஒரு விலைக்கு அமெரிக்க டொலர்களை வாங்கி கூடுதல் விலைக்கு விற்று பெரும் இலாபம் அடையக்கூடியதாக இருக்கிறது. சமூகத்தின் அடிநிலையில் உள்ளவர்கள் கண்ணியமான வாழ்க்கையை நடத்துவதற்கு பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். தங்களது சொற்ப உடமைகளை விற்பனை செய்யாமல் அல்லது மேலும் கடன் பெறாமல் அவர்களால் வாழ்க்கையை நடத்தமுடியவில்லை. 25 சதவீதத்திற்கும் அதிகமான குடும்பங்கள் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளதாக தற்போது மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நிலை அடுத்த சில வருடங்களுக்கு தொடரும் என்று கூறப்படுகிறது. இரு வருடங்களுக்கு முன்னர் வறுமைக் கோட்டுக்கு கீழ் 13 சதவீதமான குடும்பங்களே இருந்தன.

எனது இரு அனுபவங்கள் மனித அவலங்களை தெளிவாக வெளிக்காட்டுகின்றன. நான் பணியாற்றும் காரியாலயத்தின் பாதுகாப்பு பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட பாதுகாப்பு கம்பனியின் ஊழியர் பற்றியது முதலாவது அனுபவம். பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்ட அவர் மூன்று வாரங்களாக கடமைக்கு வரமுடியாதவராக இருக்கிறார். கொழும்பில் இருந்து 27 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள வீட்டுக்கு அவரைப் பார்க்க நான் சென்றபோது ஒரு தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்னால் அவர் அமர்ந்திருந்தார். அந்த பெட்டியில் இருந்து ஒலி வந்தது. ஆனால் படங்கள் வரவில்லை.

தொலைக்காட்சி பெட்டி தான் நோயில் வீழ்வதற்கு முன்னர் அதாவது ஒரு மாதத்துக்கு முன்னரே பழுதாகிவிட்டது என்று அவர் சொன்னார். திருத்தியெடுக்க சுமார் 2000 ரூபா செலவாகும் என்று நினைத்து அதை அருகில் உள்ள நகருக்கு கொண்டு சென்றபோது அதற்கு 7000 ரூபா செலவாகும் என்று அங்குள்ளவர்கள் கூறியதாகவும் அதனால் அதை திருத்தாமலேயே வீட்டுக்கு கொண்டுவந்து விடடதாகவும் என்னிடம் அவர் கூறினார்.

தொலைக்காட்சி பெட்டிக்கு அருகே மேசையில் செலுத்தப்படாத மின்கட்டணப்பட்டியல் சிவப்பு அறிவித்தலுடன் காணப்பட்டது. கடமைக்கு வருவதில்லை என்பதால் அவரால் தனது சம்பளத்தை பெறமுடியாது. வேலை செய்யும் மணித்தியாலங்களின் பிரகாரமே அவருக்கு சம்பளம் வழங்கப்பட்டுவந்தது.

அவரது மனைவி அருகாமையில் உள்ள பிளாஸ்டிக் தொழிற்சாலையில் வேலை செய்கிறார். போதிய ஆடர்கள் கிடைக்கும்போது கிராமத்தவர்களுக்கு அந்த தொழிற்சாலை தினமொன்றுக்கு 800 ரூபா சம்பளத்துடன் வேலை வழங்குகிறது. ஆனால் நோய்வாய்ப்பட்ட கணவரைப் பராமரிக்க வேண்டுமென்பதால் மூன்று வாரங்களாக மனைவி வேலைக்கு செல்லவில்லை. அவர்களின் இரு பிள்ளைகள் பாடசாலைக்கு செல்கிறார்கள். நான் அங்கு இருந்தபோது மகள் ரியூசன் வகுப்பில் இருந்து இரு நண்பிகளுடன் வந்தார். அடுத்த ரியூசன் வகுப்புக்கு போவதற்கு முன்னதாக நண்பிகளுடன் மதிய உணவை பகிர்ந்துகொள்ளலாம் என்று எதிர்பார்த்தார். எல்லா பிள்ளைகளும் எதிர்பார்ப்பதைப் போன்று தேவையான உணவை பெற்றோர் தயார் செய்துவைத்திருப்பார்கள் என்று அந்த பிள்ளையும் நம்பியது.

எனது இரண்டாவது அனுபவம் அபான்ஸ் வீதி சுத்திகரிப்பு தொழிலாளி ஒருவருடனானது. தனது மனைவிக்கு மருந்து வாங்குவதற்கு பணம் கேட்டு என்னிடம் அவர் வந்தார். புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்த மனைவிக்கு சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. ஆனால் அவரது குடலில் இன்னொரு சத்திரசிகிச்சை செய்ய வேண்டியேற்பட்டது. உடனடி மருந்துக்காக அவருக்கு 3000 தேவைப்பட்டது. இரு சிகிச்சைகளையுமே இலவசமாக அரசாங்க வைத்தியசாலையில் செய்யக்கூடியதாக இருந்தது அவரது அதிர்ஷ்டம்.

ஒரு காலத்தில் மிகவும் மெச்சத்தக்கதாக இருந்த இலங்கையின் சமூக நலன்புரி திட்டங்களின் மரபுரிமையாக வந்ததே இந்த இலவச சுகாதார சேவை. அரசியல் தலைவர்களின் மோசடித்தனமான போக்குகளினால் பாதிக்கப்படுவதற்கு முன்னர் அந்த சேவை சிறப்பானதாக இருந்துவந்தது. புராதன மத மரபுச்சொத்துக்களை பாதுகாப்பதற்கான போராட்டம் போன்ற உணர்ச்சிபூர்வமான பிரச்சினைகளினால் மக்களின் கவனம் திசை திருப்பப்படுகின்ற போதிலும் இலவச மருத்துவ சேவை போன்ற நலன்புரித்திட்டங்கள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகும். மகாத்மா காந்தி ஒரு தடவை கூறியது போன்று நல்ல சமுதாயம் என்பது பெரும்பான்மையினரதோ அல்லது சிறுபான்மையினரதோ நல்வாழ்வை அல்ல சகலரினதும் நல்வாழ்வைப் பாதுகாப்பதாக இருக்கவேண்டும்.

### இரு தரப்பு ஆதரவு

நான் மேற்கூறிய அனுபவங்கள் நேர்மையாகவும் கடுமையாகவும் உழைக்கும் அதேவேளை கிடைக்கும் வருமானத்திற்குள் வாழ்க்கையைச் சமாளிக்க முடியாமல் துன்பப்படும் சாதாரண மக்களின் இடர்பாடுகளாகும். இந்த துன்பநிலையைக் கொண்டுவந்த பொருளாதார வீழ்ச்சிக்கு அவர்கள் எந்த வகையிலும் பொறுப்பாளிகள் இல்லை. பாதுகாப்பு படைகளையும் பயங்கரவாத தடைச்சட்டத்தையும் பயன்படுத்தி அறகலய போராட்டம் ஒரு வருடத்துக்கு முன்னர் அடக்கியொடுக்கப்பட்ட பிறகு பொது மக்கள் அமைதியாக இருக்கிற்ர்கள். (எமது படைவீரர்கள் போரை எவ்வாறு வென்றார்கள் என்று முன்னாள் ஜனாதிபதி கூறியதைப் போன்று மனித உரிமைகள் சாசனத்தை கையில் வைத்துக்கொண்டு படையினர் அறகலயவை ஒடுக்கவில்லை) பயங்கரவாத தடைச்சட்டத்தின் மூலம் விசாரணையின்றி, பிணை வழங்காமல் நீண்டகாலத்துக்கு ஆட்களை தடுத்துவைக்க முடியும்.



கலாநிதி ஜெகான் பெரேரா

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவுசெய்யப்பட்ட பிறகு மக்களின் மனநிலையில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. இலங்கையை அதன் அவலத்தில் இருந்து மீட்டெடுக்கும் அதிசயத்தை நிகழ்த்திக்காட்டுவதற்கு நாட்டு மக்களினாலும் சர்வதேச சமூகத்தினாலும் ஜனாதிபதிக்கு அவகாசம் கொடுக்கப்பட்டது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஜனாதிபதியினதும் அவரது ஆதரவாளர்களினதும் எதிர்பார்ப்புகளும் அபிலாசைகளும் நோக்கங்களும் கூடுதலான அளவுக்கு செயல்களை விடவும் வெறும் பேச்சுக்களிலும் சட்டங்களை நிறைவேற்றுவதிலுமே மட்டுபடுத்தப்பட்டதாக இருக்கிறது.

பொருளாதார மிட்சிக்கு அப்பால் இலங்கை சமுதாயத்தின் ஏனைய பிரச்சினைகளையும் கையாளுவதற்கு ஜனாதிபதி முயற்சிகளை முன்னெடுத்துவருகிறார். அவற்றில் முக்கியமானது இன நெருக்கடியும் இன, மத சமூகங்களுக்கு இடையிலான நம்பிக்கையின்மையுமாகும். தற்போது ஜெனிவாவில் தொடங்கியிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் ஆராயப்படும் நிலையில், நீண்டகால வன்முறை, போர் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் பதில் கூறப்படாமல் இருக்கும் பிரச்சினைகளைக் கையாள இவ்வருட இறுதியில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை அமைப்பதற்கு அரசாங்கம் உறுதிபூண்டிருக்கிறது.

அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி மாகாண சபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரங்களை பரவலாக்கம் செய்யப் போவதாகவும் ஜனாதிபதி அவ்வப்போது கூறிவருகின்றார். வடக்கு, கிழக்கில் இடம்பெறுவதாக கூறப்படுகின்ற ஆக்கிரமிப்புகளுக்கு மத்தியில் தங்களது நில உடமைகளையும் விவசாயத்தையும் பாதுகாப்பதில் மக்களுக்கு இருக்கும் அக்கறைகளை கவனிப்பதிலும் ஜனாதிபதி முன்னுரிமை கொடுத்திருக்கிறார்.

பொருளாதாரம் மற்றும் இன உறவுகள் தொடர்பிலான இந்த பிரச்சினைகளில் பெரும்பாலானவற்றில் தங்களை பாதுகாக்கக்கூடிய மாற்றம் எதையும் மக்களினால் இன்னமும் காணமுடியவில்லை. அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் ஒரு தரப்பை மறு தரப்பு உச்சிமுந்துவதிலும் அடுத்த தேர்தலில் வெற்றிபெறுவதிலும் அக்கறை காட்டுவதற்கு பதிலாக நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய பொருளாதார மற்றும் இன விவகார கொள்கைகளில் இணக்கத்தை காணவேண்டியது அலசியமாகும். எதிரணி அரசியல் கட்சிகள் அவற்றின் நடத்தைகளில் பொறுப்புணர்வுடன் நடந்துகொண்டு, அரசாங்கத்துடன் மக்களை மோதவைக்காத அணுகுமுறைகளை கடைப்பிடிப்பதுவும் நாட்டில் உறுதிப்பாடும் அமைதியும் நிலவுவதற்கு ஓரளவுக்கு காரணம்.

எதிரணிக் கட்சிகள் அரசாங்கத்துக்கு நேர்மறையான ஆதரவை வழங்கி, தற்போதைய நிலைவரம் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தி, பிரச்சினைகளை எவ்வாறு கையாளலாம் என்பதற்கான சிறந்த சிந்தனையை முன்வைக்கவேண்டியது அவசியமாகும். அவ்வாறு செய்வதன் மூலம் மக்களின் தேவைகளையும் அபாலாசைகளையும் நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்துக்கு வலுவூட்டி ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் இறங்கச்செய்யக்கூடியதாக இருக்கும்.




# இரண்டு வீடுகள் கையளிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 22

வன்னிஹோப் நிறுவனத்தின் அனுசரணையில் மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் மாலையர்கட்டு மற்றும் கோவில் போரதீவு ஆகிய இரு இடங்களில் புனரமைப்புச் செய்யப்பட்ட இரண்டு வீடுகள் உத்தியோக பூர்வமாக வன்னி ஹோப் நிறுவனத்தின் அதிகாரிகளால் உரிய பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

இதன்போது வன்னி ஹோப் நிறுவனத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளர் எம்.ரி. பாரீஸ், மற்றும் அதன் இணைப்பாளர்கள், போரதீவுப் பற்று பிரதேச செயலக அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இதன் போது கலந்துகொண்டனர். (அ)

# திருட்டுக் குற்றச்சாட்டில் 21 வயது இளைஞன் கைது

வவுனியா, ஜூன் 22

வவுனியாவை சேர்ந்த 21 வயது இளைஞர் ஒருவர் திருட்டுக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் நேற்று புதன்கிழமை தெரிவித்துள்ளனர்.

வவுனியா, குருமண்காடு பகுதியில் உள்ள இரு வீடுகளில் இடம்பெற்ற நகைகள் திருட்டு, மற்றும் வைரவபுளியங்குளத் தில் வீடு ஒன்றில் இடம்பெற்ற நகைகள் திருட்டு தொடர்பிலேயே இந்த இளைஞர் கைது செய்யப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியா, சூசைப் பிள்ளையார்குளம் பகுதியைச் சேர்ந்த இளைஞரே கைது செய்யப்பட்டார்.

கைதானவ ரிடம் இருந்து 10 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய்க்கு அடகு வைக்கப்பட்ட நிலையில் நகைகள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தலங்கைமங்கைகுளம் கையளிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 22

வட்டுக்கோட்டை - சித்தன் கேணி - துரட்டிப்பானை அம்பாள் ஆலயத்துக்கு அருகே புனரமைக்கப்பட்ட தலங்கை மங்கை குளம் மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

புனரமைக்கப்பட்ட குளம் யாழ்ப்பாணம் கமநல அபிவிருத்தி திணைக்கள துணை ஆணையாளர் திருமதி தெய்வநாயகி பிரணவனால் சம்பிரதாய முறைப்படி திறந்து வைக்கப்படவுள்ளது.

சங்கானை தெற்கு கமக்கார அமைப்பின் ஆதரவுடன் உலக சித்தன்கேணி ஒன்றிய மக்களின் நிதி அனுசரணையுடன் ப்ரத்யங்கிரா அறக்கட்டளையால் இந்தக் குளம் புனரமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மட்டக்களப்பு ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவராக நஸீர் அஹமட்

மட்டக்களப்பு, ஜூன் 22

மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான நியமனக் கடிதத்தை பிரதமர் தினேஷ் குணவர்தனவிடமிருந்து அமைச்சர் நஸீர் அஹமட் கடந்த செவ்வாய்க்கிழமை பெற்றுக்கொண்டார். (அ)



# மாடுகள் அறுக்க அனுமதி இல்லை

மட்டக்களப்பு, ஜூன் 22

உழ்ஹிய்யா மாடுகளை வீடுகளில் அறுப்பதற்கு காத்தான்குடி நகர சபை அனுமதி வழங்காது என காத்தான்குடி நகர சபை பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

இம்முறை உழ்ஹிய்யா மாடுகளை வீடுகளில் அறுப்பதனை கட்டாயம் தவிர்ந்து கொள்ளுமாறும் அதற்காக சபையினால் அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் அவ்வறித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# அம்பாறை மாணவியரை ஒரு வாரமாக காணவில்லை

அக்கரைப்பற்று, ஜூன் 22

அம்பாறை இங்கினியாகல பொல்வத்தை பிரதேசத்தில் கடந்த 15 ஆம் திகதி முதல் பாடசாலை மாணவிகள் இருவர் காணாமல் போயுள்ளனர் என்று இங்கினியாகல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரண்டு மாணவிகளும் பயிற்சி வகுப்புக்கு செல்வதாகக் கூறிவிட்டு கடந்த 15 ஆம் திகதி வீட்டை விட்டு வெளியேறினர். இதன் பின்னர் இவர்கள் குறித்து ஒரு வாரமாக எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்று பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

பி. ஜி. அஷானி விஷ்மிகா மற்றும் ஆர்.எம்.பவீஷா நெத்மினி என்ற தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவிகளே இவ்வாறு காணாமல் போயுள்ளனர். (ஐ)






# சமயக் கடமைகளுக்கு இடையூறு ஏற்படாதவாறு பார்த்துக்கொள்க!

## கிழக்கு ஆளுநரிடம் இம்ரான் எம்.பி கோரிக்கை

**திருமலை, ஜூன் 22**

**கிழக்கு மாகாணத்தில் ஒழுங்கு செய்யப்படும் நிகழ்வுகள் சமயக் கடமைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் இருப்பதை உறுதி செய்துகொள்ளுமாறு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் கடிதமொன்றினை ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ளார்.**



அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டின் ஏனைய மாகாணங்களோடு ஒப்பிடுகையில் கிழக்கு மாகாணத்தில் அதிக முஸ்லிம்கள் வாழ்கின்றனர் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். இந்நிலையில் கிழக்கு மாகாணத்தினால் ஒழுங்கு செய்யப்படும் நிகழ்வுகளை முஸ்லிம்களின் சமயக் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில் ஒழுங்கு செய்வது குறித்து கவனம் செலுத்துமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த 2023.06.16 ஆம் திகதி திருகோணமலையில் இடம்பெற்ற கல்விக் கல்லூரி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் வைபவத்தில் தாங்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நியமனக் கடிதம் வழங்கியுள்ளீர்கள். இது குறித்து நான் மிகவும் சந்தோசமடைகின்றேன்.

எனினும், அன்றைய தினம் வெள்ளிக்கிழமை நாளாகும். முஸ்லிம்கள் ஜூம்ஆத் தொழுகைக்கு செல்லவேண்டிய நாள். அந்த வைபவத்தை ஒழுங்கு செய்தவர்கள் இதனைக் கவனத்தில் கொள்ளாது அந்த நிகழ்வை நீட்டிச் சென்றதால் அந்த நிகழ்வில் கலந்து கொண்ட முஸ்லிம் அதிகாரிகள், நியமனம் பெற்ற ஆசிரியர்கள், அவர்களது பெற்றோர் எனப் பலரும் ஜூம் ஆவுக்குச் செல்ல முடியாத நிலையேற்பட்டுள்ளது.

இது குறித்து பலரும் மிகவும் கவலையேடு எனது கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

எனவே, கிழக்கு மாகாணத்தில் எதிர்காலங்களில் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகள் எந்தவொரு சமய கடமைகளுக்கும் இடையூறு ஏற்படாத வகையில் இருப்பதை உறுதி செய்துகொள்ளத் தேவையான அறிவுறுத்தல்களை அனைத்து அதிகாரிகளுக்கும் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்-என்றுள்ளது. (அ)



கல்முனை வலய மட்ட 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி மாணவர்கள் இரண்டாம் இடத்தைப் பெற்று கிழக்குமாகாண மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ)

# கதிர்காமத்தில் இருந்து வந்த பஸ் வாய்க்காலுக்குள் பாய்ந்து விபத்து

## பத்து பேர் சம்மாந்துறை ஆஸ்பத்திரியில்

*காரைதீவு, ஜூன் 22*



*கதிர்காமத்தில் இருந்து மட்டக்களப்பு நோக்கி வந்த பஸ் சம்மாந்துறை வட்டிவுட்டியில் கட்டுப்பாட்டை இழந்து வாய்க்காலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.*

*சம்மாந்துறை - கல்முனை பிரதான வீதியில் மல்வத்தை நேற்று புதன்கிழமை அதிகாலை 2.00 மணியளவில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.*

*கதிர்காமம் இருந்து இரவு பத்து மணியளவில் புறப்பட்டு சம்மாந்துறை வழியினூடாக மட்டக்களப்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றே இவ்வாறு வீதியை விட்டு விலகி மரம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.*

*இந்த விபத்தில் சாரதி உட்பட 10 பேர் சம்மாந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.*

*பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.* (அ)

# பத்திரகாளி அம்பாளின் முத்துச் சப்பர ஊர்வலம்!



*காரைதீவு, ஜூன் 22*

*காரைதீவு ஸ்ரீபத்ரகாளியம்மன் ஆலயத்தின் வருடாந்த தீமிதிப்பு உற்சவத்தின் ஓரங்கமாக நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இரவு முத்துச் சப்பர ஊர்வலம் சிறப்பாக நடைபெற்றது.*

*கடந்த 14ஆம் திகதி புதன்கிழமை கதவு திறத்தலுடன் ஆரம்பமாகிய தீமிதிப்பு உற்சவம் தற்போது 10 நாட்கள் சடங்குகள் இடம்பெற்று வருகின்றன.*

*நாளை வெள்ளிக்கிழமை காலை தீமிதிப்பு வைபவம் பிரதம பூசகர் குமாரகுலசிங்கம் லோகேஷ் தலைமையிலே நடைபெறும்.*

*பூசைகள் தினமும் பகல் 12 30 மணிக்கும் இரவு 7 மணிக்கும் இடம் பெறும்.* (அ)

# கிழக்கு மாகாண ஆளுநர் ஜப்பான் பயணமானார்!

## சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பது குறித்து ஆராய்வு

*கொழும்பு, ஜூன் 22*

*ஜப்பானுக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், மியாசாகி பாராளுமன்ற உறுப்பினர் ஷிம்பே மட்ஷிதாவை சந்தித்து கிழக்கு மாகாணம் மற்றும் மலையகத்தில் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பது குறித்து கலந்துரையாடினார்.*

*இலங்கையின் நீண்ட கால நண்பரான மியாசாகியின் பாராளுமன்ற உறுப்பினர் ஷிம்பே மட்ஷிதாவின் அழைப்பின் பேரில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஜப்பான் பாராளுமன்றத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டார்.*

*ஜப்பான் பாராளுமன்றத்துக்கு விஜயம் மேற்கொண்ட ஆளுநர் செந்தில் தொண்டமான், இலங்கை மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்தல் மற்றும் இரு தரப்பு சுற்றுலாத்துறையை ஊக்குவித்தல் குறித்தும் கலந்துரையாடினார்.*



*ஜப்பானில் உள்ள மியாசாகி கடற்கரைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் ஊடாக இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள உலகத் தரம் வாய்ந்த சுற்றுலா இடங்களில் ஒன்றாக அறுகம்பே கடற்கரையை ஊக்குவிக்க கடற்கரை அதிகாரிகள் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தார்.*

*அத்துடன், அறுகம்பே போன்ற சுற்றுலா இடங்களில் சமமான ஆற்றலைக் கொண்ட ஜப்பானின் மியாசாகி கடற்கரையை ஊக்குவிப்பது போல், அறுகம்பே கடற்கரையை உள்ளூர் அதிகாரிகளால் சர்வதேச சுற்றுலாப் பயணிகளுக்காக ஊக்குவிக்கப்படும் எனவும் ஷிம்பேய் மட்ஷிதாவிடம் கூறினார்.*

*அறுகம்பே கடற்கரையை சர்வதேச சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக ஷிம்பேய் மட்ஷிதா ஆளுநரிடம் உறுதியளித்தார்.*

*மேலும் ஜப்பானிய சுற்றுலாப் பயணிகளுக்காக கிழக்கு மாகாணம் மற்றும் மலையகத்தின் சுற்றுலாத் தளங்களை மேம்படுத்துவது குறித்தும் ஆளுநர் கலந்துரையாடினார். அதற்கும் ஷிம்பேய் மட்ஷிதா தனது பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளார்.* (அ)

# பிரான்ஸின் கடல்சார் நிபுணரும் மாயமான நீர்மூழ்கியில் பயணம்!

## டைட்டானிக் சிதைவுகளை நெருங்கி ஆய்வுகள் நடத்த 35 தடவை சுழியோடியவர்



பாரிஸ், ஜூன் 22

அத்திலாந்திக் சமுத்திரத்தின் அடியில் டைட்டானிக் கப்பல் சிதைவுகளுக்கு அருகே கடந்த ஞாயிற்றுக்கிழமை திடீரெனக் காணாமற்போன உல்லாச நீர்மூழ்கியில் பயணித்த ஐவரில் ஒருவர் பிரெஞ்சுப் பிரஜை எனத் தகவல் வெளியாகியுள்ளது.

முன்னாள் தேசிய கடற்படை வீரரும் ஆழ்கடல் சுழியோடியும் கடல்சார் தொல்லியல் ஆய்வு நிபுணருமாகிய 77 வயதான போல்-ஹென்றி நர்ஜோலெ காணாமற்போன நீர்மூழ்கியில் பயணித்துள்ளார் என்பதை அவரது குடும்பத்தினர் உறுதிப்படுத்தி உள்ளனர்.

ஆழ்கடலடி ஆய்வுப்பணிகளில் ஈடுபடுகின்ற “ஆர்எம்எஸ் டைட்டானிக்” என்ற அமெரிக்க கம்பனியின் பணிப்பாளராகப் பணிபுரிந்து வருகின்ற அவர், டைட்டானிக் கப்பல் சிதைவுகளை நேரில் ஆய்வுசெய்வதற்காக அத்திலாந்திக் சமுத்திரப்புடுக்கைக்கு சுமார் 35 தடவைகள் சென்று மீண்டவர். டைட்டானிக் கப்பலின் 5ஆயிரத்துக்கு மேற்பட்ட பொருள்களை மீட்கும் பணிகளை மேற்பார்வை செய்தவர். டைட்டானிக் கப்பல் சிதைவுகளுக்கான காப்புரிமையை வைத்திருக்கின்ற அவரது கம்பனி, டைட்டானிக் கப்பல் பொருள்களின் கண்காட்சிகளையும் நடத்திவருகின்றது.

“மிஸ்டர் டைட்டானிக்” என்ற பட்டப் பெயரால் அழைக்கப்படுகிறார். டைடானிக் கப்பல் சிதைவுகள் தொடர்பாக அவர் எழுதிய ஒரு நூல் உலக அளவில் பெரும் கவனத்தைப் பெற்றிருந்தது. கடலுக்காகத் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர் ஆழ் சமுத்திரத்தில் காணாமற்போயுள்ளார் என்ற செய்தி நாடு முழுவதும் துயரத்தை ஏற்படுத்தி உள்ளது.

அவர் பயணித்த நீர்மூழ்கியைக் கண்டு பிடிப்பதற்காக பிரான்ஸின் கடல்சார் ஆய்வு நிறுவனம் ஆழ்கடலடித் தேடுதல் ரோபோ இயந்திரங்களை வட அத்திலாந்திக் சமுத்திரத்துக்கு அனுப்பியுள்ளது.

அதேசமயம், வெளியுலகத் தொடர்பு ஏதுமின்றி வட அத்திலாந்திக் சமுத்திரத்தில் காணாமற்போயுள்ள இலகு ரக உல்லாசப் பயண நீர்மூழ்கியைக் கண்டுபிடிப்பதற்கான தேடுதல் பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றன. ஆழ்கடல் சமுத்திர அடித்தளங்களில் மீட்புப் பணிகளில் ஈடுபடுகின்ற நிபுணத்துவம் வாய்ந்த சர்வதேச நிறுவனங்கள் சிலவும் நீர்மூழ்க்கியைத் தேடும் பணியில் இணைந்துள்ளன. அமெரிக்க கரையோரக் காவல் படை ஆழ் கடலில் சுமார் 7ஆயிரத்து 600 சதுர மைல்கள் பரந்த பிரதேசத்தில் மிகச் சவாலான தேடுதல் பணியை நடத்தி வருகிறது.

எனினும் நீர்மூழ்கி தொடர்பாக எந்தத் தகவலும் இன்னும் கிடைக்கவில்லை.

நீர்மூழ்கியில் உள்ள ஐந்து பேரும் அடுத்த நாற்பது மணி நேரத்துக்குச் சுவாசிப்பதற்குத் தேவையான அளவு ஒக்சிஜனே அதில் உள்ளது என்ற அச்சமூட்டும் தகவலை இந்தச் செய்தியை எழுதும் சமயத்தில் கரையோரக் காவல்படை அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார். அடுத்த நாற்பது மணி நேரத்துக்குள் நீர்மூழ்கியைக் கண்டுபிடித்து மீட்கா விட்டால் அதில் உள்ள ஐவரையும் உயிருடன் காண முடியாது போகலாம் என்ற கவலை எழுந்துள்ளது.

நீர்மூழ்கியில் பயணித்த ஐவரில் இங்கிலாந்து கோடீஸ்வரர் ஹாமீஸ் ஹாடிங் மற்றும் பாகிஸ்தான் செல்வந்தர் ஷாஜதா தாவூத் அவரது மகனான சுலேமான் ஆகிய மூவரும் மட்டுமே டைட்டானிக் கப்பல் சிதைவுகளை நேரில் பார்வையிடுவதற்காகக் கட்டணம் செலுத்தி உல்லாசப் பயணத்தை மேற்கொள்பவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. நான்காவது நபரான ஹென்றி நர்ஜோலெ தனது வழக்கமான ஆழ்கடல் ஆய்வுப் பணி நிமித்தம் அடி ஆழத்துக்குச் சென்றிருந்தார். ஐந்தாவது நபர் நீர்மூழ்கிக் கப்பலுக்குச் சொந்தமான “ஓசியன்கேற் எக்ஸ்பெடிசன்ஸ்” நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரியாகிய ஸ்ரொக்டொன் றுஷ் என்று உறுதிப்படுத்தப்படாத தகவல் ஒன்று தெரிவித்தது. (அ)

# சீனாவுடனான எல்லைப் பிரச்னையில் எந்த சூழலையும் எதிர்கொள்ள தயார்!

## பிரதமர் நரேந்திர மோடி உறுதி

நியூயோர்க், ஜூன் 22

**சீனாவுடனான எல்லைப் பிரச்னையில் எந்தச் சூழ்நிலையையும் எதிர்கொள்ள தயார் நிலையில் இருக்கிறோம் என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.**



அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் அழைப்பின்பேரில் பிரதமர் மோடி நேற்று முன்தினம் அமெரிக்காவுக்கு சென்றார். இதையொட்டி அமெரிக்க நாளிதழ் “தி வால் ஸ்டிரீட் ஜேர்னலுக்கு” அவர் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:-

இந்தியா அமெரிக்கா இடையிலான உறவு முன்எப்போதும் இல்லாத வகையில் வலுவடைந்து வருகிறது.

பாதுகாப்பு வர்த்தகம் தொழில்நுட்பம் எரிசக்தி துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுகின்றன. இரு நாடுகளின் தலைவர்கள் இடையே அசைக்கமுடியாத நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

சீனாவுடன் நல்லுறவு நிலைத்திருக்க எல்லைப் பகுதிகளில் அமைதி நிலவ வேண்டும். கருத்து வேறுபாடுகளுக்கு அமைதி பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவே விரும்புகிறோம். அதே நேரம் இந்தியாவின் இறையாண்மை கண்ணியத்தை காப்பாற்ற எந்த சூழ்நிலையையும் எதிர்கொள்ள தயார் நிலையில் இருக்கிறோம்.

இந்திய-ரஷ்ய உறவு குறித்து விமர்சனங்கள் எழுகின்றன. இந்த விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு அனைவரும் அறிந்தது. எங்களது நிலைப்பாட்டை உலகம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. உக்ரைன் விவகாரத்தில் இந்தியா நடுநிலை வகிப்பதாக சிலர் கூறுகின்றனர். நாங்கள் நடுநிலை வகிக்கவில்லை அமைதியின் பக்கம் நிற்கிறோம். ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து வழங்கவேண்டும்.

சுதந்திர இந்தியாவில் பிறந்த முதல் இந்தியப் பிரதமர் என்ற பெருமையை நான் பெற்றிருக்கிறேன். அதனால் எனது சிந்தனை செயல்பாடுகள்இ பேச்சுகளில் எனது தாய்நாட்டின் பண்புகள், மாண்புகள், மரபுகள் வலுவாக எதிரொலிக்கின்றன-என்றார்.

# ஹொண்டூரஸ் சிறைச்சாலைக்குள் பெண் கைதிகள் இடையே மோதல்

## 41 பேர் உயிரிழப்பு




நியூயோர்க், ஜூன் 22

ஹொண்டூரஸ் நாட்டில் உள்ள பெண்கள் சிறைச்சாலையில் பெண் கைதிகள் இடையே இடம்பெற்ற மோதல் மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 41 பெண் கைதிகள் உயிரிழந்தனர்.

இதில் 26 பேர் தீ வைத்து எரித்து கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றவர்கள் துப்பாக்கியால் சுட்டும், கத்தியால் குத்தியும் கொல்லப்பட்டதோடு ஏராளமான கைதிகள் படுகாயம் அடைந்த நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இதையடுத்து கலவரத்தை கட்டுப்படுத்த அதிகாரிகள் தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

ஆனால் கைதிகள் ஆவேசத்துடன் மோதிக் கொண்டதால் உடனடியாக கட்டுக்குள் வரவில்லை.

நீண்ட போராட்டத்துக்கு பிறகு கலவரத்தைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். (அ)

‘மோடியின் தீவிர ரசிகன் நான்’

# அமெரிக்காவில் இந்திய பிரதமரை சந்தித்த எலான் மஸ்க் புகழாரம்

நியூயோர்க், ஜூன் 22

பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். அங்கு பல்வேறு நிகழ்வுகளில் அவர் பங்கேற்கிறார். இந்நிலையில், டெஸ்லா நிறுவனத்தின் நிறுவனர் எலான் மஸ்க், பிரதமர் மோடியை நியூயோர்க் நகரில் சந்தித்தார். இந்த சந்திப்பின் போது இந்தியாவில் முதலீடு செய்வது தொடர்பாக மஸ்க் பேசியுள்ளதாகவும் தெரிகிறது.

3 நாள் பயணமாக அமெரிக்கா சென்றுள்ளார் பிரதமர் மோடி. அதன் ஒரு பகுதியாக மஸ்க்-பிரதமர் மோடி சந்திப்பு நடந்துள்ளது. அப்போது அடுத்த ஆண்டு தான் இந்தியாவுக்கு வர உள்ளதாகவும் எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

“நான் பிரதமர் மோடியின் தீவிர ரசிகன். அவரை எனக்கு மிகவும் பிடிக்கும். அவர் இந்தியாவுக்கு சரியானதைச் செய்ய விரும்புகிறார் என்று என்னால் உறுதியாக சொல்ல முடியும். அதே போல புதிய நிறுவனங்களுக்கு வாய்ப்பு வழங்குவது மற்றும் ஆதரவாகவும் இருக்கிறார். அவருடனான இந்த சந்திப்பின்போது நாங்கள் சிறப்பு வாய்ந்த பல விஷயங்களை பேசினோம்.

அவருக்கு இந்தியா மீது அதிக அக்கறை உள்ளது. அது எந்த அளவுக்கு என்றால் இந்தியாவில் குறிப்பிடத்தக்க முதலீடுகளைச் செய்ய அவர் எங்களைத் தூண்டுகிறார். அதற்கான சரியான நேரத்தை எதிர்பார்த்து நாங்கள் உள்ளோம்” என எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

அத்தோடு ஸ்பேஸ்-எக்ஸ் மூலமாக, ஸ்டார் லிங்க் மூலமாக இந்தியாவின் ஊரகப் பகுதியில் இணைய சேவையை வழங்குவது, டெஸ்லா நிறுவனம் சார்ந்த பணிகள் தொடர்பாக இந்தியாவில் முதலீடு செய்யும் திட்டம் இருப்பதாகவும் மஸ்க் தெரிவித்துள்ளார். (அ)



## 200 போட்டிகளில் விளையாடிய முதல் வீரரானார் ரொனால்டோ

ரெய்க்விக், ஜுன் 22

200 சர்வதேச உதைபந்தாட்ட போட்டிகளில் விளையாடிய முதல் வீரர் என்ற பெருமையை போர்த்துக்கலின் ரொனால்டோ படைத்துள்ளார்.

யூரோ கிண்ண தகுதி சுற்று போட்டிக்காக நேற்று முன்தினம் ஐஸ்லாந்து அணிக்கு எதிராக அவர் விளையாடிய போட்டி அவரின் 200ஆவது மைல்கல்லாக அமைந்தது. அத்துடன், இது கின்னஸ் உலக சாதனையாகவும் அமைந்துள்ளது.

சர்வதேச அளவில் அதிக போட்டிகளில் விளையாடிய வீரர் என்ற தனித்துவ சாதனையை ரொனால்டோ கடந்த மார்ச் படைத்திருந்தார். அப்போது குவைத் வீரர் அல்-முதாவாவின் சாதனையை அவர் தகர்த்தார். அல்-முதாவா, மொத்தம் 196 சர்வதேச உதைபந்தாட்டப் போட்டிகளில் விளையாடியிருந்தார். என்பது குறிப்பிடத்தக்கது.

38 வயதான ரொனால்டோ கடந்த 2003இல் போர்த்துக்கல் அணிக்காக சர்வதேச உதைபந்தாட்டப் போட்டிகளில் விளையாடத் தொடங்கினார். சர்வதேச போட்டிகளில் மொத்தம் 123 கோல்களை ரொனால்டோ பதிவு செய்துள்ளார். இதன் மூலம் அதிக கோல்கள் பதிவு செய்த வீரர்களின் பட்டியலிலும் அவர்தான் முதலிடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றைய போட்டியில் ஐஸ்லாந்துக்கு எதிராக கோல் பதிவு செய்து ரொனால்டோ அசத்தினார். ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் மிகவும் தாமதமாகப் பதிவு செய்யப்பட்ட கோல் அது. ஆனாலும், அணியின் வெற்றியை அதுவே உறுதி செய்தது. ஏனெனில், இந்தப் போட்டியில் போர்த்துக்கல் 1-0 என வெற்றி பெற்றது.



## 3 மணி நேரம் போராடி வெற்றி பெற்ற வீனஸ்

பர்மிங்ஹாம், ஜுன் 22

பர்மிங்ஹாம் கிளாசிக் ரென்னிஸ் போட்டியில் 43 வயதான வீனஸ் வில்லியம்ஸ் 3 மணி நேரத்துக்கும் மேலாக போராடி 48ஆம் நிலை வீராங்கனையான இத்தாலியின் கமிலா ஜியோர்ஜியை வீழ்த்தினார்.

இங்கிலாந்தின் பர்மிங்ஹாமில் மகளிருக்கான பர்மிங்ஹாம் கிளாசிக் ரென்னிஸ் போட்டி நடக்கிறது. இதன் முதல் சுற்றில் உலகத் தரவரிசையில் 48ஆவது இடத்தில் உள்ள இத்தாலியின் கமிலா ஜியோர்ஜி, 697ஆம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸை எதிர்த்து விளையாடினார்.

சுமார் 3 மணி நேரத்துக்கும் மேலாக நடைபெற்ற இந்த மோதலில் 43 வயதான வீனஸ் வில்லியம்ஸ் 7-6 (5), 4-6, 7-6 (6) என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

தரவரிசையில் 50 இடங்களுக்குள் உள்ள வீராங்கனைக்கு எதிராக சுமார் 4 வருடங்களுக்கு பிறகு தற்போது தான் வெற்றி கண்டுள்ளார் வீனஸ் வில்லியம்ஸ்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் 7 முறை கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ள வீனஸ் வில்லியம்ஸ் இந்த ஆண்டின்தொடக்கத்தில் ஒக்லாந்து போட்டியில் பங்கேற்ற போது காயம்அடைந்தார். இதனால் 5 மாதங்களுக்கும் மேலாக சர்வதேச போட்டிகளில் விளையாடாமல் இருந்து வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

### ஆஷஷ் டெஸ்ட் தொடர்

# முதல் போட்டியில் ஆஸி. த்ரில் வெற்றி!

பர்மிங்ஹாம், ஜுன் 22

ஆஷஷ் டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றுள்ளது. நேற்று முன்தினம் நடந்த போட்டியில் அவுஸ்திரேலியா 2 விக்கெட்களால் இந்த த்ரில் வெற்றியை பதிவு செய்தது.

முன்னதாக, கடந்த 16ஆம் திகதி தொடங்கிய ஆஷஷ் டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் முதலில் இங்கிலாந்து 8 விக்கெட்கள் இழப்புக்கு 393 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

அணியின் தரப்பில் அதிகபட்சமாக ஜோ ரூட் 7 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்கள் உள்பட 118 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தார். அவுஸ்திரேலிய தரப்பில் நதன் லயன் 4 விக்கெட்களை கைப்பற்றினார்.

பின்னர் அவுஸ்திரேலியா தனது இன்னிங்ஸில் 386 ஓட்டங்களுக்கு 10 விக்கெட்களையும் பறிகொடுத்தது. அதிகபட்சமாக உஸ்மான் கவாஜா 14 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 141 ஓட்டங்கள் விளாசினார்.

இங்கிலாந்து பந்துவீச்சாளர்களில் ஸ்ருவர்ட் பிரோட், ஒல்லி றொபின்சன் ஆகியோர் தலா 3 விக்கெட்கள் சாய்த்தனர்.

இதையடுத்து முதல் இன்னிங்ஸில் 7 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆஆவது இன்னிங்ஸை ஆடிய இங்கிலாந்து, 273 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக ஜோ ரூட், ஹேரி புரூக் ஆகியோர் தலா 46 ஓட்டங்கள் சேர்த்தனர்.

அவுஸ்திரேலியாவின் பந்து



வீச்சில் பட் கம்மின்ஸ், நதன் லயன் ஆகியோர் தலா 4 விக்கெட்கள் வீழ்த்தினர்.

இறுதியாக 281 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ்திரேலியா, திங்கட்கிழமை முடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 107 ஓட்டங்கள் சேர்த்திருந்தது.

போட்டியின் கடைசி நாளான செவ்வாய்க்கிழமை ஆட்டம் தொடங்குவது மழையால் தாமதமானது. மதிய உணவு இடைவேளைக்கு பிறகு தொடங்கிய ஆட்டத்தில் அன்றைய தினத்துக்கான ஓவர்களை நடுவர்கள் 67ஆகக் குறைத்தனர். அவுஸ்திரேலிய இன்னிங்ஸை உஸ்மான் கவாஜா, ஸ்கொட் பொலண்ட் தொடர்ந்தனர். இதில் பொலண்ட் 2 பௌண்ட்ரிகளுடன் 20 ஓட்டங்களை சேர்த்து வெளியேற, டிராவிஸ் ஹெட் 3 பௌண்ட்ரிகளுடன் 16 ஓட்டங்களுக்கு நடையைக் கட்டினார்.

கமரூன் கிறீன் 2 பௌண்ட்ரிகளுடன் 28, அலெக்ஸ் ஹேரி 2 பௌண்ட்ரிகளுடன் 20 ஓட்டங்களுக்கு வெளியேற்றப்பட்டனர். நிதானமாக ஓட்டங்கள் சேர்த்த கவாஜா 7 பௌண்ட்ரிகள் உள்பட 65 ஓட்டங்களுடன் அரங்கம் திரும்பினார். இறுதியில் பட் கம்மின்ஸ் 4 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 44, நதன் லயன் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் அணியை வெற்றி பெறச் செய்தனர்.

இங்கிலாந்து தரப்பில் ஸ்ருவர்ட் பிரொட் 3, ஒல்லி றொபின்சன் 2, மொயீன் அலி, ஜோ ரூட், பென் ஸ்டோக்ஸ் ஆகியோர் தலாஒரு விக்கெட் எடுத்தனர். (ஐ)

# சிக்கந்தர் ரஸா அதிவேக சதம் சிம்பாப்வே அநாயச வெற்றி!

ஹராரே, ஜுன் 22

சிம்பாப்வேயின் ஹராரே நகரில் நேற்று முன்தினம்நடைபெற்ற கிரிக்கெட் உலகக் கிண்ணத் தகுதிச் சுற்றில் குழு ஏ போட்டியில் சிக்கந்தர் ரசா 54 பந்துகளில் 6 பௌண்ட்ரிகள், 8 சிக்ஸர்களுடன் 102 ஓட்டங்கள் விளாசி சிம்பாப்வே கிரிக்கெட் அணிக்காக ஒருநாள் போட்டிகளில் அதிவேக சத சாதனை படைத்தார்.

இதன் மூலம் நெதர்லாந்து குவித்த 315 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை 40.5 ஓவர்களில் அநாயசமாக விரட்டி 4 விக்கெட்கள் இழப்புக்கு 319 ஓட்டங்கள் என்று சிம்பாப்வே அபார வெற்றி பெற்றது.

பந்துவீச்சிலும் அசத்திய சிக்கந்தர் ரசா, 4 விக்கெட்களை வீழ்த்தி ஆட்ட நாயகன் விருதைத் தட்டிச் சென்றார்.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணியில் விக்ரம் ஜித் சிங் (88), மாக்ஸோ டவுட் (59), அணித் தலைவர் ஸ்கொட் எட்வர்ட்ஸ் (83) ஆகியோர் அட்டகாசமாக ஆட கடைசியில் இறங்கிய சகிப் சுல்பிகர்



31 பந்துகளில் 34 ஓட்டங்கள் விளாச 315 ஓட்டங்களை எட்டியது. சிம்பாப்வே தரப்பில் சிக்கந்தர் ரசா 4 விக்கெட்களை கைப்பற்றினார்.

சிம்பாப்வேக்கு இது பெரிய இலக்குதான். ஏனெனில், நெதர்லாந்தின் பந்து வீச்சு பலமானதாக இருந்தது. ஆனால் சிம்பாப்வேயின் துடுப்பாட்டம் அந்த அணியின் பந்துவீச்சை முறியடித்து விட்டது.

சிம்பாப்வேயின் ஷோன் வில்லியம்ஸ், 58 பந்துகளில் 10 பௌண்ட்ரிகள் 2 சிக்ஸர்களுடன் 91 ஓட்டங்களை குவித்தார்.

முன்னதாக தொடக்க வீரர்களான ஜாய்லார்ட் கும்பீ 40 ஓட்டங்களையும், கிரெய்க் எர்வின் 50 ஓட்டங்களையும் அடித்து 13.3 ஓவர்களில் 80 ஓட்டங்கள் என்ற நல்ல தொடக்க அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தனர்.

24.1 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 162 ஓட்டங்கள் என்ற நிலையில் சிம்பாப்வே ஓவருக்கு 7 ஓட்டவிகிதத்தில் அடித்தாடியது.

சிக்கந்தர் ரசா 25ஆவது ஓவரில் தான் களம் இறங்கினார். முன்னதாக ஷான் வில்லியம்ஸ் 17 மற்றும் 21ஈம் ஓவர்களுக்கிடையே 48 ஓட்டங்களைக் குவித்து உத்வேகம் கொடுத்ததும் குறிப்பிடத்தக்கது.

ரசா 54 பந்துகளில் சதம் அடித்து சாதித்தார். 39ஆவது ஓவரில் ரசா, தன் 8 சிக்ஸர்களில் 3 சிக்சர்களை தொடர்ச்சியாக விளாசியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அரச திணைக்களங்களில் வீண்விரயங்கள் அதிகரிப்பு

## பிரதமர் தினேஷ் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 22

**திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களில் வீண் விரயங்கள் காணப்படுவதாகவும் இது நாட்டுக்கு பாரிய பிரச்சினை எனவும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.**

இந்த வீண் விரயங்களைக் கட்டுப்படுத்த முன்னுரிமையளித்து செயற்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த வீண் விரயங்களை குறைத்துக் கொள்வதே எமது இலக்காகும். அதனை முக்கியமான இலக்காகக் கொண்டு அதற்கு முன்னுரிமையளித்து நாம் செயற்பட வேண்டியது அவசியமாகும்.



யார் என்ன சொன்னாலும் திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களில் வீண் விரயங்கள் கிடையாது என எவராலும் கூற முடியாது. இது நாம்முகம்கொடுக்கும் பாரிய பிரச்சினையாகும்.

சில புள்ளி விவரங்களில் காணப்படும் பிழைகள் மற்றும் அதிலிருந்து திசை திருப்பும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மோசடிகள் குறிப்பிடத்தக்கவை.

இவ்வாறான மோசடிகாரர்களின் சுமையையும் இறுதியில் திறைசேரி அல்லது பாராளுமன்றமே பொறுப்பேற்க வேண்டியுள்ளது. அது பொது மக்களுக்கான பாரிய பாதிப்புகளுக்கே வழிவகுக்கும்-என்றார். (அ)

# தந்தையும் மகனும் கோர விபத்தில் பலி!

கொழும்பு, ஜூன் 22

வாகன விபத்தில் தந்தையும் மகனும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கொழும்பு, பாதுக்கை பிரதேசத்தில் நேற்று முன் தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஹைஏஸ் வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதால் விபத்து இடம் பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த 38 வயதுடைய தந்தையும், 10 வயதுடைய மகனும் இந்தக் கோர விபத்தில் சாவடைந்துள்ளனர்.

பிரத்தியேக வகுப்புக்குச் சென்ற மகனை மோட்டார் சைக்கிளில் தந்தை ஏற்றிக் கொண்டு வீட்டுக்குப் பயணித்த வேளையிலேயே கோர விபத்தில் சிக்கிச் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்த 10 வயதுச் சிறுவன் இவ்வருடம் நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பிரத்தியேக வகுப்புக்குச் சென்றிருந்தார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஹைஏஸ் வாகனத்தின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# நாட்டில் பரவும் மண் காய்ச்சல்

கொழும்பு, ஜூன் 22

எலிக்காய்ச்சலுக்கு நிகரான மிலியோடோசிஸ் அல்லது மண் காய்ச்சல் தற்போது நாட்டின் பல மாகாணங்களில் பரவி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த சங்கத்தின் தலைவர் பேராசிரியர் இனோகா கொரியா,

“மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டம், வடமேல் மாகாணத்தின் புத்தளம் மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் இந்நோய் பதிவாகி வருகின்றது. இந்த நோய் உயிரிழப்பை ஏற்படுத்தும்” என்று அவர்கள் சுட்டிக்காட்டினர்.

தற்போதைய மழையுடன் கூடிய காலநிலையுடன் நீர் மற்றும் மண்ணின் ஊடாக பரவும் பக்டீரியாவினால் ஏற்படும் மெலியோடோசிஸ் அல்லது மண் காய்ச்சல் எனப்படும் நோய் பரவி வருவதாக இலங்கை மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது.

பாதங்களில் ஏற்படும் காயங்கள், அழுக்கு நீரைக் குடித்து வாசனை வீசுவது போன்றவற்றின் ஊடாக இந்த பக்டீரியாக்கள் உட்கொள்வதாக வைத்தியர்கள் சுட்டிக்காட்டினர். (அ)

# ஊடகவியலாளர் பிரதீபன் விசாரணைக்கு அழைப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ்ப்பாண மாவட்ட பிராந்திய ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபன் கிளிநொச்சி மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்,

மருதங்கேணியில் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் பலர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டுள்ள நிலையில் அந்தச் சம்பவம் தொடர்பில் செய்தி பிரசுரித்தமை குறித்து வாய் முறைப்பாடு பெறுவதற்காக கிளிநொச்சி மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரால் அவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். (அ)

# நடாஷாவுக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜூன் 22

பௌத்த மதத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சமூக ஊடக செயற்பாட்டாளர் நடாஷா எதிரிசூரிய எதிர்வரும் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.



அவரது பிணை கோரிக்கையை நிராகரித்து கோட்டை நீதவான் திலின கமகே இந்த உத்தரவை பிறப்பித்தார்.

அத்துடன் யூரியூப்பில் தனது அறிக்கையை வெளியிட்ட புருனோ திவாகரவை தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப்பிணை மற்றும் 50,000 ரூபா ரொக்கப் பிணையில் விடுவிக்குமாறு கோட்டை நீதவான் திலின கமகே நேற்று உத்தரவிட்டார்.

அத்துடன், மத நல்லிணக்கத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் அறிக்கைகளை வெளியிட்ட ராஜாங்கனை சத்தரத்ன தேரரை எதிர்வரும் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் கோட்டை நீதவான் திலின கமகே நேற்று உத்தரவிட்டார். (அ)

# இந்திய துணைத் தூதரக ஏற்பாட்டில் சர்வதேச யோகா தின நிகழ்வு யாழில்





யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் ஒன்பதாவது சர்வதேச யோகா நாள் நிகழ்வு நேற்று யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

யாழ். இந்திய துணைத் தூதுவரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சர்வதேச யோகா நாள் நிகழ்வில் யோகா பயிற்சி வழங்கப்பட்டது. இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சிறி சற்குணராஜா, யாழ்ப்பாணப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹெட்டியாராச்சி, வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், யாழ். இந்தியத் துணை தூதரக அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# இலங்கை-தென் கொரியா விமான சேவை விரைவில்

கொழும்பு, ஜூன் 22

இலங்கைக்கும் தென் கொரியாவுக்கும் இடையிலான நேரடி விமான சேவையை குறுகிய காலத்திற்குள் ஆரம்பிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.



தென்கொரியாவில் வேலை வாய்ப்புகளுக்காக செல்பவர்களை அழைத்துச் செல்ல பயன்படுத்தப்படும் விமானங்கள் தொடர்ந்து தாமதமாகி வருவதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தென் கொரியாவுக்கும் இலங்கைக்கும் இடையே நேரடி விமான சேவை தொடங்கும் வரை அந்தப் பணியாளர்களை சிங்கப்பூர் வழியாக தென் கொரியாவுக்கு அனுப்பத் திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# சொத்துப் பொறுப்பு அறிக்கை வெளியிடவேண்டியவர்கள் யார்?

## விஜயதாச ராஜபக்ஷ விளக்கம்

கொழும்பு, ஜூன் 22

ஊழல் ஒழிப்பு சட்டமூலத்தின்படி, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பட்டியலை சமர்ப்பிக்கவேண்டியவர்களின் பட்டியலில் ஜனாதிபதி, ஆளுநர்கள், சுயாதீன ஆணைக்குழுக்களின் ஆணையாளர்கள், தூதுவர்களை உள்ளடக்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என நீதித்துறை சிறை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் சொத்துப் பொறுப்பு அறிக்கையை சமர்ப்பிக்கவேண்டியவர்களில் முதலமைச்சர்கள், மாகாண சபை அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தூதரகங்களின் நிறைவேற்று அதிகாரிகள் ஆகியோரும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.



ஊழல் ஒழிப்பு சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு விவாதத்தின்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (அ)

## மலையக...

வெற்றியாகும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம். பி. தெரிவித்துள்ளார்.

அத்துடன், வடக்கு, கிழக்கில் தேசிய விடுதலை போராட்டம் நிகழ்கிறது. அங்கே போர் ஓய்ந்தாலும் இராணுவ பிரசன்னம் ஓயவில்லை - என்றும் அவர் கூறியுள்ளார்.

ஹற்றன் கிருஷ்ணபவான் மண்டபத்தில் நடைபெற்ற மலையக காணி உரிமை மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலகில் நடைபெறும போராட்டங்களில் பெரும்பாலானவை காணி உரிமை கோரியே நடைபெறுகின்றன. காணி உரிமையே சமூகத்துக்கு தேசிய இன அந்தஸ்தை வழங்குகிறது. வடக்கு, கிழக்கில் தேசிய விடுதலை போராட்டம் நிகழ்கிறது. அங்கே போர் ஓய்ந்தாலும் இராணுவ பிரசன்னம் ஓயவில்லை. அதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

ஆகவே, மலையகத்தில் கவனமாகக் கோரி பெற வேண்டும். அது தெருவில் கோஷம் எழுப்புவது போல், சமூக ஊடகங்களில் எழுதுவது போல் சுலபமான காரியம் அல்ல. இங்கே வாழ, பயிர் செய்ய நிலம் வேண்டும். ஐந்து பேர்ச் என்பதிலிருந்து ஏழு பேர்ச் என்று உயர்த்த பெரும்பாடுபட வேண்டியிருந்தது - என்றார். (ஐ)

## வெளிநாட்டு...

எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதனை இலங்கை தனித்து செய்ய முடியாது. அதற்காக சர்வதேச அமைப்புகளுடன் கைகோக்க வேண்டும். துரதிர்ஷ்டவசமாக ஊழல் எதிர்ப்பு சட்டத்தில் இலங்கையை சம்பந்தப்பட்ட சர்வதேச அமைப்புகளுடன் இணைக்கும் எந்தவொரு பிரிவும் இல்லை.

அந்தச் சட்டத்துக்குத் தேவையான பலத்தை அளிக்கும் வகையில் சர்வதேச அமைப்புகளின் ஆதரவைப் பெற்று அதற்குரிய ஏற்பாடுகளைச் சேர்க்க வேண்டும் என்றும் பேராசிரியர் தெரிவித்தார். (ஐ)

## குருந்தூர்...

கட்டளை பிறப்பித்திருந் தது. ஆனால், அந்தக் கட் டளையை மீறி விகாரை கட்டி நிறைவு பெற்றது.

இந்த நிலையில், அங்கு தற்போது பதிக்கப்பட்ட கல் வெட்டில் “இலங்கை இராணுவம், சிவில் பாதுகாப்பு படையினரின் அயராத பங்க ளிப்புடனும் பௌத்தலோக நற்பணி மன்றத்தின் முழுமையான நிதிப் பங்களிப்பை அடிப்படையாகக் கொண்டும் நிறைவடைந்துள்ளது”, என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## 194 பாடசாலை...

வெற்றிடம் என்ற விடயம் கனகராயன்குளம் மகா வித்தியாலத்துக்கு மட்டுமான பிரச்னை இல்லை. வடக்கு, கிழக்கில் பல இடங்களிலும் காணப்படுகின்ற ஒரு பிரச்னையாகும். வடக்கை பொறுத்தவரை சுமார் 194 பாடசாலைகள் மாணவர்கள் இல்லாமையால் மூடப்பட்டுள்ளன. இதற்கு காரணம் கிராமப்புறங்களில் இருந்து நகரங்களை நோக்கி மாணவர்கள் நகரத் தொடங்கியமையும் பிறப்பு வீதம் குறைந்து செல்வதுமே.

இதேவேளை, எமது சமூகத்தில் விவாகரத்து அதிகரித்தமை, குழந்தை பேறு குறைவடைந்தமை, வயது சென்ற திருமணங்கள் அதிகரித்து காணப்படுதல் மற்றும் குடிபோதை, போதைப்பொருள் பாவனை, தற்கொலை போன்ற பல்வேறு சமூகப் பிரச்னைகள் அதிகரித்துள்ளன.

எனவே, இவற்றை எல்லாம் கடந்து இந்த சமூகம் வாழ வேண்டும் என்றால் புலம்பெயர்ந்த சமூகம் ஆற்ற வேண்டிய பணி நிறைய இருக்கின்றது. இதே போன்ற சிறிய பணிகளோடு மட்டும் நின்று விடாது இந்த சமூகத்திலே புரையோடிப்போயிருக்கின்ற பல்வேறு உளநல பிரச்னைகளுக்கும் தீர்வு தேட வேண்டிய காலம் தற்போது நிலவுகிறது - என்றார். (ஐ)

# அரச திணைக்களங்களில் பெண்களுக்கு தொல்லை!

## தடுக்க சட்டம் விரைவில்

கொழும்பு, ஜூன் 22

அரச திணைக்களங்களில் பெண்கள் பாலியல் ரீதி யாக துன்புறுத்தல்களுக்கு முகம் கொடுக்கிறார்கள். இந்தக் குற்றங்களுக்கு எதிராக புதிய சட்டமூலம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

நேற்று இலஞ்ச - ஊழல் ஆணைக்குழு தொடர்பான புதிய சட்டமூலத்தை சமர்ப்பித்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

## ஐ.நா.பொறிமுறையை

சேகரிக்கும் பொறிமுறையை முற்றாக நிராகரிப்பதாக இலங்கை அறிவித்துள்ளது.

இது பரந்துபட்ட அளவில் சட்ட மற்றும் அரசியல் ரீதியான தாக்கங்களை ஏற்படுத்தும் என்றும் அரசமைப்புக்கு உட்பட்டே பொறுப்புகூறல் செயல் பாடுகளை மேற்கொள்ள முடியும் எனவும் மீண்டும் அதே காரணங்களை நேற்றைய அமர்வில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவிக்கு அண்மையில் அனுமதி வழங்கப்பட்டது. தேவையான மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படும் அதேவேளை, சமூக பாதுகாப்பு திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் அதே வேளை அனைத்து சமூகங்களுக்கு இடையிலும் அமைதியையும் நல்லிணக்கத்தையும் பேணுவது குறித்து அரசாங்கம் மனதில் வைத்து செயல்படுகின்றது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் குறித்து அனைத்து தரப்பினருடனும் மேலதிக கலந்துரையாடல்களை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. உள்ளூர் தேவைகளை பூர்த்தி செய்யும் அதேவேளை சர்வதேச தரத்துக்கு அமைய அதனை உருவாக்குவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

கடந்த மார்ச் மாதம் வெளிவிவகார அமைச்சர் மற்றும் நீதி அமைச்சர் ஆகியோர் தென்னாபிரிக்காவுக்கு சென்று, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அனுபவம் தொடர்பாக ஆய்வு செய்வதற்காக சென்றிருந்தனர்.

இந்தப் பொறிமுறை இலங்கைக்கு பொருத்தமானதாக இருக்கும் அதே வேளை, அதனை செயல்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. இது தொடர்பான சட்டமூலத்தை தயாரிப்பதற்காக ஆலோசனை குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

காணாமல் போனோர் அலுவலகம் 3 ஆயிரம் முறைப்பாடுகள் தொடர்பாக ஆரம்பக்கட்ட விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. காணாமல் போனோர் பற்றிய சான்றிதழை வழங்குவதையும் ஜனாதிபதி துரிதப்படுத்தியுள்ளார்.

இராணுவம் வசமிருந்த 92 வீதமான காணிகள் உரிய உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. மோதல்களின் பின்னர் வன இலாகா வனஜீவராசிகள் திணைக்களத்தினால் கையககப்படுத்தப்பட்ட மீதமாக உள்ள காணிகளை உரிய தனிப்பட்ட நபர்களை கையளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

## இலஞ்சம்...

புதிய சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் தனது உரையில் தெரிவித்தார்.

மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு இணங்கவே இலஞ்சம் - ஊழல் ஆணைக்குழு தொடர்பான சட்டமூலத்தை அரசாங்கம் கொண்டுவரவுள்ளதாக விமர்சிக்கப்பட்டது. இது தவறான கருத்தாகும். நீண்ட நாட்களாக நடைமுறையில் இருக்கும் சட்டமூலம் தொடர்பாக மக்கள் மத்தியில் பல்வேறு விமர்சனங்கள் காணப்படுகின்றன.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான் நாம் இந்த புதிய இலஞ்ச - ஊழல் ஆணைக்குழு தொடர்பான சட்டமூலத்தை தயாரித்துள்ளோம். ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மையை பாதுகாக்கும் வகையில், ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட பதவிகள் அனைத்தும் அரசமைப்பு பேரவைக்கு இணங்கவே நியமிக்கப்படும்.

ஓய்வுபெற்ற நீதிபதிகள், பொலிஸாரை ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிப்பதால் சட்டமூலத்தின் ஊடாக எதிர்ப்பார்த்த பலன் கிடைக்காது என்பதை நாம் அனுபவங்கள் ஊடாகக் கண்டுள்ளோம். எனவே, 62 வயதுக்கு மேற்படாத, குறித்த விடயதானத்தில் அனுபவமும் நிபுணத்துவம் வாய்ந்த நபர்களையே ஆணைக்குழுவுக்கு நியமிக்கவுள்ளோம்.

மேலும், ஜனாதிபதி முதல் ஆணைக் குழுக்களின் தலைவர்கள், தூதுவர்கள், ஆளுநர்கள், மாகாண முதல்வர்கள், மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்கள் என அனைவரும் தங்களின் சொத்துப் பட்டியலை உறுதிப்படுத்த வேண்டும் என்ற சரத்தும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் ஆண்டும் இந்த பட்டியலை வெளியிட வேண்டும். ஓய்வு பெற்றாலும், இரண்டு வருடங்களுக்கு சொத்துகளின் விவரங்களை அவர்கள் வெளியிட வேண்டும் - என்றும் நீதி அமைச்சர் கூறினார். (ஐ)

## உண்மையை...

தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில.

கடும் எதிர்ப்புக்கு மத்தியில் முல்லைத்தீவு - குருந்தூர்மலைக்கு பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தலைமையிலான குழுவினர் நேற்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதன் பின்னர் அவர் செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

“வடக்கு - கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இங்கிருந்து கொழும்புக்கு வந்து மக்கள் பிரச்னையை கூறுகின்றார்கள். எனினும், அதன் உண்மைத் தன்மை எமக்குத் தெரியாது. அதனைத் தெரிந்துகொள்வதற்காகவே நான் இன்று வந்தேன். இது 2 ஆயிரத்து 100 வருடங்கள் பழைமையான விகாரை. இந்த விகாரை எமக்கு மாத்திரமின்றி முழு உலகுக்கும் சொந்தமானது. இவ்வாறான பழமையான சொத்துக்கள் வேறு நாடுகளில் இல்லை.

வயல் நிலங்களை தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த நிலங்களாக பெயரிட மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகள் தொடர்பில் ஆராய வேண்டும். எதன் அடிப்படையில் திணைக்களத்தினர் இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த வயல் நிலங்களுக்கடியில் எதாவது இருப்பதை தொல்பொருள் திணைக்களத்தினர் இணங்கண்டிருநதால் குறித்த இடம் பாதுகாக்கப்பட வேண்டும். மக்களால் எந்த இடத்திலும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இதனடிப்படையில், மக்களுக்கு எந்தவொரு தீங்கும் நடக்க நாம் இடமளிக்க மாட்டோம்.” - என்றார்.

## இந்தியா...

நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தியாவில் தலைமறைவாகி இருந்தபோது இலங்கையால் விடுக்கப்பட்ட உத்தியோகபூர்வ அறிவித்தலின் பிரகாரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்ட செல்வபாக்கியம் சுதாகரன் தொடர்பில் சட்டமா அதிபர் விடுத்திருந்த ஆலோசனைக்கு அமையவே அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவில் இருந்து நாடு கடத்தப்பட்டதன் பின்னர், 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தியதாக பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். (ஐ)

## பொறுப்புக்...

பொறுப்புகூறல் மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவது மாத்திரமல்லாமல் மனித உரிமைகளை பாதுகாப்பதையும் உறுதிப்படுத்துமாறு இலங்கையிலுள்ள அரசியல் கட்சிகள் மற்றும் அரசாங்கத்தை அலுவலகம் வலியுறுத்துகின்றது.

உள்ளூர் பதற்றம் மற்றும் முரண்பாடுகளை தீர்க்கும் வகையில் தமிழ் கட்சிகளுடன் ஜனாதிபதி ஆரம்பித்துள்ள பேச்சுகள் மற்றும் தொல்பொருள், வனவள திணைக்களம் மற்றும் படைத் தரப்பினருக்கு காணிகளை சுவீகரிக்கப் போவதில்லை என்ற உறுதிமொழி ஆகியவற்றுடன் அனைத்து தரப்பினருக்குமான ஞாபகார்த்த நினைவுசின்னம் உட்பட கடந்தகால விடயங்களை கையாள்வது தொடர்பான அறிவிப்புகள், உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடுகள் தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையும் நாங்கள் வரவேற்கின்றோம்.

எனினும் இந்த விடயங்கள் புதிய சட்டங்கள் மற்றும் கொள்கைகள் ஊடாக இந்த உறுதிமொழிகள் தெளி வாக தெரியக்கூடிய வகையில், இந்த மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

நல்லிணக்க பொறிமுறையான உண்மை ஆணைக்குழு தொடர்பான அறிவிப்பு குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும். கடந்த காலங்களில் இரண்டு ஆணைக்குழுக்களை இலங்கை அரசாங்கம் அமைத்திருந்தது. எனினும், அந்த ஆணைக்குழுக்கள் மூலம் பொறுப்புக்கூறல் நிறைவேற்றப்படவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பணிமனை பாதிக்கப்பட்டவர்களை திருப்தி செய்யும் வகையில் எதிர்பார்த்த இலக்குகளை அடையவில்லை.

கடந்த காலம் தொடர்பான பொறுப்புக்கூறலில் கணிசமான இடைவெளி காணப்படுகின்றது. தண்டனை விலக்களிப்பு காணப்படும் வரை நீடித்த சமாதானத்தை அடைய முடியாது. 51ஃ1 தீர்மானத்தின் கீழ் பொறுப்புகூறலை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட திட்டம் குறித்த முன்னேற்றம் தொடர்பாக அதற்கான குழு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இது தற்போது முன்னெடுக்கப்படும் குற்றவியல் விசாரணைகளுக்கு உறுதியான ஆதரவளிக்கும் ஒன்றாக இருக்கும். ஐ. நா. மற்றும் ஏனைய மூலங்கள் ஊடாக சேகரிக்கப்படும் தரவுகள் எதிர்கால பொறுப்புக்கூறல் முயற்சிகளுக்கு பயன்படுத்த முடியும்.

இந்த செயல்பாட்டில் பாதிக்கப்பட்டவர்கள் முக்கிய பங்கை வகிப்பார்கள். பாதிக்கப்பட்டவர்களின் அமைப்புகள் மற்றும் குடிசார் அமைப்புக்களுடன் செயல்திறன் மிக்க ஈடுபாடு இதில் இருக்கும். கடந்த கால மீறல்கள் குறித்து இலங்கை அதிகாரிகள், நம்பகமான விசாரணைகள் மற்றும் வழக்கு தொடுக்கும் செயல்பாடு உள்ளிட்ட ஏனைய பொறுப்புகூறல் செயல்பாடுகளை முன்னெடுக்கவில்லை. இந்தப் பொறுப்புகூறல் செயல்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படாதுவிடின் சர்வதேச சமூகம் அதனை பூர்த்தி செய்வதற்கான பங்கை வகிக்க முடியும்” - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# வடக்கு ரயில் மார்க்கத்தை மேம்படுத்த இந்தியா மேலும் 15 மில்லியன் டொலர்!

## அமைச்சர் பந்துல குணவர்தன தகவல்



கொழும்பு, ஜுன் 22

**வடக்கு ரயில் மார்க்கத்தை மேம்படுத்த மேலும் 15 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்க இந்திய அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

கொழும்பில் உள்ள இந்திய தூது வர் கோபால் பாக்லேயுடன் இடம் பெற்ற கலந்துரையாடலை அடுத்து இந்த ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட் டதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இதன்படி, கொழும்பு மற்றும் காங்கேசன்துறை இடையில் ரயில் கடவைகளில் உள்ள சமிக்ஞை அமைப்பை நவீனமயமாக்குவதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

வடக்கு மார்க்கத்தில் ரயில் சேவைகள் தற்போது அனுராதபுரம் ரயில் நிலையத்துக்கு மட்டுப்படுத் தப்பட்டுள்ளன.

இந்தப் பாதையை நவீனப்படுத் துவதற்கு வசதியாக கொழும்பு-காங்கேசன்துறைக்கான சேவைகள் இந்த வருடம் ஜனவரி மாதம் இடைநிறுத்தப்பட்டன.

இந்நிலையில் இந்தியாவால் நீடிக்கப்பட்ட கடன் உதவியுடன் மேற்கொள்ளப்படும் இந்தப் பணி கள் இம்மாதத்தில் முடிவடைய இருந்தபோதிலும் பல்வேறு கார ணங்களால் தாமதமாகி வருகின்றன.

இதேவேளை, கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையி லான பயண நேரம் ஒன்றரை மணி நேரத்தால் குறைக்கப்படும் என போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன கூறினார். (அ)

# ஊடகத்துறையை மேம்படுத்த நெறிமுறை கோவை அவசியம்

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, ஜுன் 22

சுதந்திர ஊடகத் துறையை மேம் படுத்த நெறிமுறைக் கோவை யொன்றை அறிமுகப்படுத்த வேண் டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இலத்திரனியல் ஊடகங்களை ஒழுங்குப்படுத்தும் சட்டமூலம் தொடர்பாக நேற்று பாராளுமன் றில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கருத்து வெளியிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "இலத்தி ரனியல் ஊடகங்களை ஒழுங்குப்ப டுத்த சட்டமொன்று அவசியம் என்பதை அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

ஆனால், இந்த ஒழுங்குறுத்தல் நெறிமுறைகள் என்பது ஊடக நிறு வனங்களிடம்தான் காணப்பட வேண்டுமே ஒழிய, அரசாங்கத்தி டம் இருக்கக்கூடாது.

இவ்வாறான சட்டங்கள் நாட் டுக்கு அவசியம் என்றாலும், இதன் அதிகாரங்கள் ஊடக நிறுவனங்களி டம்தான் காணப்படவேண்டும்.

ஊடகவியலாளர்களின் பங்கு பற்றலுடன்தான் இந்த செயற்பாடு மேற்கொள்ளப்படவேண்டும்.

இது சுய ஒழுங்குப்படுத்தல் செயற்பாடாக இருக்கவேண்டும்.

அரசாங்கத்திடம் அந்த அதிகா ரம் சென்றால், அரசாங்கத்தை விமர்சிக்கும் ஊடகங்கள் பாதிக்கப் படக்கூடிய சாத்தியம் காணப்படு கிறது.

இது சுதந்திர ஊடகத்தை கட் டுப்படுத்தும் வகையில் அமைந்து விடும் என்பதோடு, ஜனநாயகத்திற் கும் பாதிப்பை ஏற்படுத்திவிடும்.

சுதந்திர ஊடகத்துறையை மேம் படுத்த நெறிமுறைக் கோவையொன்றை அறிமுகப்படுத்தவேண் டும்.

ஊடகவியலாளர்களுக்கு சுய ஒழுங்குறுத்தல் ஒன்றை கொண்டு வருவதுதான் சிறப்பாக அமையும்.

இலத்திரனியல் ஊடகங்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கை ஊடாக, அரசாங்கம் அடக்கு முறையை மேற்கொள்ள முற்படுகி றதா என்ற கேள்வியும் எழுகிறது.

இந்த விடயம் தொடர்பாக அனைத்து தரப்புடனும் கலந்து ரை யாடி ஒரு நவீன ஊடக கலாசாரத்தை ஏற்படுத்துவோம்-என்றார். (அ)

# வவுனியாவில் பற்றி எரிந்த வீட்டினுள் குடும்பஸ்தர் நேற்று சடலமாக மீட்பு!

வவுனியா, ஜுன் 22

வவுனியாவில் தீ பிடித்து எரிந்த வீட்டினுள் குடும் பஸ்தர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியா-தேக்கவத்தை பகுதியில் உள்ள வீடொன்று தீ பிடித்து எரிகின்றது என நேற்றுக் காலை வவுனியா பொலிஸாருக்கும் மாநகர சபை தீயணைப்புப் பிரிவுக் கும் அயலவர்களால் தகவல் வழங்கப்பட்டது.

அதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப் புப் படையினர் மற்றும் பொலிஸார் வீட்டில் பரவிய தீயை அணைத்து உள்ளே சென்றபோது, அறை ஒன்றி னுள் வீட்டில் வசித்த குடும்பஸ்தர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டார்.

சடலத்தை மீட்ட பொலிஸார், உடற்கூற்றுப் பரி சோதனைக்காகச் சடலத்தை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# போதை மாத்திரைகளுடன் இரண்டு இளைஞர்கள் கைது!

கொழும்பு, ஜுன் 22

பசறையில் இருவேறு பகுதிகளில் போதை மாத்திரை களுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பசறை, கணேயல்ல பகுதியில் போதை மாத்திரை களுடன் 25 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப் பட்டார்.

69 போதை மாத்திரைகளுடன் குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, பசறை - பராக்கிரம மாவத்தை பகுதி யில் 50 போதை மாத்திரைகளுடன் 19 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இருவரையும் பதுளை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத் துள்ளனர். (அ)

# கருத்துச் சுதந்திரத்தை அரசாங்கம் பாதுகாக்கும்

## கூறுகிறார் மனுஷ நாணயக்கார



கொழும்பு, ஜுன் 22

அரசியலமைப்பில் தெரிவிக் கப்பட்டுள்ள கருத்துச் சுதந்தி ரத்தை பாதுகாக்கும் வகையில் அரசாங்கம் செயற் படும் என தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப் பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியலமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துச் சுதந்திரத்தை பாதுகாக்க நாம் நடவடிக்கை எடுப்போம்.

அதேநேரம், சரியான தகவல்களை மக்கள் பெற்றுக் கொள்ளும் உரிமையும் அரசமைப்பில் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

இந்த இரண்டு விடயங்களையும் முன்னிலைப்படுத் தியே நாம் இந்த சட்டமூலத்தைக் கொண்டுவர நடவ டிக்கை எடுத்துள்ளோம்.

இந்த சட்டமூலத்தின் ஊடாக, ஊடகங்கள் ஒரு போதும் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படமாட்டாது.

யாரேனும், பிழையான தகவல்களை வழங்கினால், அதற்கான ஒரு நெறிமுறையை கொண்டு வருவதற்கே நாம் இந்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இந்த சட்டமூலத்தைக் கொண்டுவர கடந்த காலங் களிலும் ஆராயப்பட்டது. 1997 ஆம் ஆண்டு உயர்நீதி மன்ற தீர்ப்பு தொடர்பாக இங்கு சுட்டிக்காட்டப் பட்டது.

அந்தவகையில், உயர்நீதிமன்ற தீர்ப்பை சவாலுக்கு உட்படுத்தும் வகையிலான சரத்துக்கள் இதில் உள்ளடக் கப்படவில்லை என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த விடயம் தொடர்பாக அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடவும் தயாராகவே உள் ளோம்-என்றார். (அ)

# எதிர்க்கட்சி எம்.பிக்களுக்கு விரைவில் அமைச்சுப் பதவி?

## அமைச்சரவையில் மாற்றம் வரும்

கொழும்பு, ஜுன் 22

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு அமைச்சுப் பதவிகளை ஒப்படைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என செய்தி கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கும் ஆளும் கட்சிகளுக்கும் இடையில் அமைச்சரவை மாற்றம் தொடர்பான கலந்துரையாடல்கள் கடந்த சில வாரங்களாக இடம் பெற்று வருகின்றன.

இந்தநிலையில், உரியமுறையில் செயற்படத் தவறிய, சில முக்கிய அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி மாற்றிய மைப்பார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுகாதார அமைச்சு மற்றும் ஊட கத்துறை அமைச்சு என்பன இதில் அடங்குவதாக அரசாங்கத் தரப்பு தகவல் ஒன்று கூறுகிறது.

முன்னதாக ஜனாதிபதிக்கும், பஸில் ராஜபக்ஷ தலை மையிலான பொதுஜன பெரமுன கட்சியினருக்கும் இடையிலான அண்மைய சந்திப்புகளில், புதிய பதவிகளைப் பொதுஜன பெரமுன கோரியுள்ளது.

எவ்வாறாயினும் தற்போதுள்ள நெருக்கடிகள் மற் றும் பொருளாதார இன்னல்களுக்கு மத்தியில் செயற் படக்கூடிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கே அமைச்சுப் பதவிகள் வழங்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.அதேநேரம், ஜனாதிபதி எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு அமைச்சுப் பதவிகளை ஒப்படைக்கும் முயற் சியில் ஈடுபட் டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (அ)

# ஊழலுக்கே இன்று இலங்கை சர்வதேச ரீதியில் பிரபலம்!

## சரத் வீரசேகர சபையில் தெரிவிப்பு



கொழும்பு, ஜுன் 22

இலங்கை இன்று ஊழல் மிக்கதொரு நாடாக சர்வதேச ரீதியில் பிரபல்யம் அடைந்துள் ளதாக சிறீ லங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப் பினர் சரத் வீரசேகர சபையில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஊழல் ஒழிப்பு சட்ட மூலம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கைக்கு வருகின்ற சுற்றுலா பயணிகளிடமி ருந்து, பொருட்கள், பணங்கள் கொள்ளையடிக்கப்படு கின்ற சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இது வெட்கப்படவேண்டிய செயல்.

நாட்டிலுள்ள அனைத்து அரச சேவையாளர்களும் ஊழல்வாதிகள் அல்ல. பல அரசியல்வாதிகளும் ஊழல்வாதிகளாக உள்ளனர். நாட்டில் தட்டுப்பாடு ஏற்படும்போது பொருட்களை பதுக்கி வைத்து பின்னர் அதிக விலைக்கு விற்பனை செய்தவர்களும் உள்ளனர்.

நாட்டின் ஜனாதிபதி நேர்மையானவராக இருக்கவேண்டும். இதேபோன்று அரசியல்வாதிகளும் நேர்மையாக இருக்கவேண்டும். எனவே, இந்த உத்தேச ஊழல் ஒழிப்பு சட்டமூலம் நிச்சயமாக நிறை வேற்றப்படவேண்டும் என்றும் அவர் கூறினார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.06.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.